தனிப்பிரதி விலை அணா 0—1—6
Reg. No. M. 3066. 1935-ஜூன்-1.
PAHUTHARIVU ("REASON")

# பகுத்தறிவு

மாதவெளியீடு.

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம், (Ltd.,)
ஈரோடு.

# பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா.

| | | | |
|---|---|---|---|
| உள் நாடு ரூ. | 1—0—0. | வெளி நாடு ரூ. | 1—8—0. |
| தனிப்பிரதி | 0—1—6. | தனிப்பிரதி | 0—2—6. |

சந்தாதாரர்களுக்கு

பகுத்தறிவுக்கு மே மாதமே வருட ஆரம்பமானதால் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் மே மாதம் முதலாகவே பத்திரிகைகள் அனுப்பப்படும்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக்குறிப்பிடவேண்டும்

---

## விஷய அட்டவணை.


சாதி சமயக்குறிகள் ஏன்? (பாட்டு)
(சாமி சிதம்பரனார்) பக்கம். 1
பகுத்தறிவு புதிதா? (எஸ். குருசாமி B. A.) ... 4
விதண்டாவாதம் (ஈ. வெ. ரா.) ... ... 6
கடவுளை யார் படைத்தார்?
(மாணிக்லால் ஹெச். வக்கீல்) ... 8
டாக்டர் பராஞ்சிபை படத்துடன் (அ. ராகவன்.) ... 16
விஞ்ஞான நினைவுகள் (பச்சையப்பன்) ... 20
பர்னாட்ஷா கருத்து. ... ... 24
எல்லாம் சுயமரியாதையால் தான். ஜோசியருக்கும்
அர்ச்சகருக்கும் சம்பாஷணை (சித்திர புத்திரன்) ... 26
மத ஆட்சி. ... ... 33
பெரிய குழந்தைகள் விளையாட்டு (கனகராஜன்) ... 34
நாஸ்திகம் (ஈ வெ ரா.) ... ... 38
சுதந்தரம் (புரொபசர் லெட்சுமி நரசு B A.) ... 44
திருடர்கள்! ஜாக்கிரதை (மிஸ்டர் திங்கர்) ... 46
கேள்வியும் விடையும்: ... ... 49
சீனப் பெண்கள். ... ... 50
விமலாவின் விடுதலை. சிறுகதை (S. C பரன்) ... 52
ஏன் குடிக்கிறாய்? ... ... 62
விஞ்ஞான உலகம். ... ... 63

# பகுத்தறிவு.

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தினின்று
வெளிவரும் ஓர் மாத வெளியீடு,

———)o(———

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்)

மலர் 1. } ஈரோடு 1935 ஜூன் 1 { இதழ் 2.

## சாதி சமயக் குறிகள் ஏன்?

("கரும்புத் தோட்டத்திலே" என்பது போல)

1. வேடம் பலவணிந்தே — இங்கு
வேற்றுமை தோன்றிட வாழும் மனிதரே!
நாடும் மனத்தினிலே — இந்த
ஞாலத்து மக்களுள் ஒற்றுமை செய்யவே
கூடும் சுகம் உடனே — என்றும்
கொள்ளுங்கள் உங்கள் அறிவில் இவ்வுண்மையை
ஓடுந் துயர் ஒழிந்தே — நல்ல
ஒற்றுமை யோடு சமத்துவம் ஓங்குமே. (வேடம்)

2. உச்சிக் குடுமிகளால் — இந்த
உலகினில் வஞ்சகம் செய்கின்ற தேதுக்கோ?
வைச்சு மயிர்தனையே — நீங்கள்
வளர்த்து முடிவதில் என்ன பயனுண்டோ?
சிச்சீ மயிர்தனிலே — பேதம்
செய்யும் வழக்கத்தை விட்டு விடுங்களே!
இச்சை கொள்ளும் மயிரால் — மண்ணில்
ஏதும் பலனில்லை வேற்றுமை போக்குவீர்!
(வேடம்)

3. நாமம் குழைத்திடுவீர்! — சிலர்
நன்றென்று சாம்பலும் கரியும் அணிகுவீர்!
சேமம் வரும் எனவே — மனம்
சிந்தித்துக் குங்குமம் கோபியும் தரிப்பீர்!
தீமை கெடும் எனவே — பல
திலதங்கள் நெற்றியில் அப்பியே திரிவீர்!
பூமியில் வாழும் மக்காள்! — நீங்கள்
பூணும் இவ் வேடத்தால் பேதங்கள் செய்வதேன்?
(வேடம்)

4. துளசியின் மாலையையும் — மரந்
தோன்றிய ருத்திரக் கொட்டை அணியையும்
சிலுவைக் கயிற்றினையும் — தொங்கச்
செய்திட்ட லிங்கந் தொடுத்த கயிற்றையும்
நலங்கள் தருமெனவே — சிலர்
நாளுங் கழுத்தினில் மாட்டித் திரிவதேன்?
உளத்தினில் பேதங்கொண்டே — நீர்
ஒருவர் ஒருவரை ஏசிப் பகைகொள்வீர்!
(வேடம்)

5. தாடியை வளர்த்திடுவீர்! — அது
தானங்கள் வேதம் உரைக்கும் மொழியென்பீர்!
ஆடை பலவிதமாய் — நீங்கள்
அணிந்ததன் மூலம்பல் சாதிகள் காட்டுவீர்!
கூடி வசிப்பதற்கே — இடம்
கொஞ்சமும் இல்லாமல் பேதங்கள் பண்ணினீர்!
மூட மதங்களினால் — இந்த
மோசங்கள் நம்மிடம் வந்து புகுந்தவே!
(வேடம்)

6. பெண்களின் வேடங்களோ — அப்பா!
பேசவும் நாவெழ வில்லை; பலவகை!
கண்களைக் கவர்வனவாம் — நல்ல
கல்கள் பதித்தபொன் நகைகள் தரிப்பார்
எண்ணும் பலமுழம்சேர் — புடவை
எடுத்துப் பலவித மாகவே உடுப்பார்
மண்ணினிற் பேதத்தையே — இந்த
மாதிரி ஆடை அணிகொண்டு செய்திட்டீர்!
(வேடம்)

7. மாதர்க்கும் ஆடவர்க்கும் — பல
மாறுதல் காட்டிடும் ஆடை அணிகளை
ஏதுக்குக் கொண்டிருப்பீர்! — இதனால்
என்ன பயனுண்டு சொல்லும் உலகத்தே?
நீதிகள் சிறந்திடவே — நல்ல
நேசம் மனிதருள் தோன்றி நிலைக்கவே
காதல் மனத்திற்கொண்டால் — இங்கு
காணும் மதசாதி வேடங்கள் அழிப்பீர்.

(வேடம்)

8. இந்த உலகினிலே — மக்கள்
யாவரும் ஒன்றெனக் காணும் வகையிலே
சந்து புரிந்திடவே — பல
சாத்திரம் சாதி மதங்கள் வழக்கங்கள்
நைந்து சிதைந்திடவே — நீங்கள்
நாடி ஒருவகை ஆடை அணிகொள்வீர்!
சிந்தைப் பயம்விடுத்தே — வீரம்
சேர்ந்தொன்று கூடுங்கள் இன்பம் பெருகுமே.

(வேடம்)

சாமி சிதம்பரனார்.

நம்முடைய நடத்தை நமது வழக்க ஒழுக்கங்களாலும், நமது தாய் தந்தையர், சுற்றத்தார், உறவினர், சினேகிதர், அடுத்தவராகியவர்களுடைய கூட்டுறவாலும் சம்பந்தப்பட்டிருக்கின்றனவே ஒழிய, கோடி மைலுக்கப்பால் மினுக்கு மினுக்கெனப் பிரகாசிக்கும் நட்சத்திரங்களால் ஒன்றும் ஆவதில்லை. திருஷ்டாந்தம் வேண்டுமானால் மெழுகுவத்தி ஒன்றை அடுத்த அறையில் கொளுத்தி வைத்து அதனால் நமது நடத்தையோ, நடவடிக்கையோ பாதிக்கப்படுகிறதா? என்று பாருங்கள். இல்லையானால் அதே வெளிச்சத்தைத்தரும் நட்சத்திரங்களால் நமது நடத்தை பாதிக்கப்படுவது என்ன நிச்சயம்?

M. சிங்காரவேலு B. A., B. L.,

# பகுத்தறிவு புதிதா?

[எஸ். குருசாமி B. A.]

"பகுத்தறிவு இயக்க" மென்பது இன்று நேற்றுத்தோன்றியதல்ல. இன்றைக்கு சுமார் 2400 வருஷங்களுக்கு முன்பாகவே அதாவது, பெரும்பாலான உலக மக்கள் காட்டுமிராண்டிகளாகவும் அறிவற்ற முழுமூடர்களாகவும் இருந்தகாலத்தில், கிரீஸ் தேசத்தில் சாக்ரட்டீஸ் என்ற தத்துவஞானி ஒருவர் தோன்றி அறிவு இயக்கத்தைப் பரப்பினர். ஆன்மா, கடவுள், மறு உலகம் முதலியவைகளைப் பற்றிப் பேசுதல் அர்த்தமற்றதும், சோம்பேறித்தனமானதுமான வேலை யென்பதைத் தம்முடைய இணையிலாத் தர்க்க முறையால் ருசுப்படுத்தினார். அதுவே உலகத்திலேயே தலைசிறந்த தர்க்க ஞானம் என்பதை நிலை நாட்டினார். ஆவேசம், அறிவின்மை கொண்ட தம் மக்களிடத்துத் தமது கொள்கையை நிலை நாட்டும் முயற்சியில் தமது உயிரையும் கொடுக்கவேண்டிய அவசியம் வந்தபோதும் அதையும் சிரித்த முகத்தோடு அர்ப்பணஞ் செய்தார்.

அவருக்குச் சுமார் 1500 ஆண்டுகட்கு முன்னர், இந்தியாவில் தோன்றிய கௌதம புத்தர், "அர்த்தமற்ற ஆபாசமாகிய "இந்து" மதமும் அதைச் சேர்ந்த வேதமும் ஜாதியும் ஒழிய வேண்டும்" என்று தம் மக்களுக்கு அறிவுறுத்தினார். "கடவுளை"ப் பற்றிக் கவலைப்படுகிறவன் "முழு மூடன் அல்லது சோம்பேறி" யென்பதாக வெள்ளையாய்ச் சொன்னார். பார்ப்பனீயம் நிறைந்த மக்கள் அதற்கு அடிமையாய் வாழ்ந்து வந்த அந்தக் காலத்தில், தற்கால சாதனங்கள் எவையுமின்றி இந்தியாவிலும் பிற இடங்களிலும் கால் நடையாய்ச் சுற்றித் திரிந்து தம் கொள்கையை அரும்பாடுபட்டு நிலைநாட்டிச் சென்றார்.

அதன் பின்னர் தமிழ் நாட்டிலும் பல அறிஞர்கள் தோன்றி "நட்டகல்லைத் தெய்வமென்று" போற்றும் அறிவின்மையையும் "நால்வகைச்சாதி இந்நாட்டில் நாட்டின" கொடுமையைப்பற்றியும் கதறிக் கதறிப் புகட்டினார்கள். அவர்களைச் "சித்தர்"களென்றும் "ஞானிக"ளென்றும் சொல்லி மக்கள் அவர்களைப் பின் பற்றாதவாறு செய்யப்பட்டனர்.

பிறகு சில நூற்றாண்டுகளாக இங்கிலாந்து, ஜெர்மனி, ரஷியா, அமெரிக்கா முதலிய நாடுகளில் ஜான்ஸ்டூவர்ட்மில், இங்கர்சால், ஜீன் மெஸ்லியர், வால்டேர் போன்ற அறிஞர்கள் தோன்றி மதத்தின் பெயரால் நடக்கும் அக்கிரமங்களையும், கடவுள் பேரால் நடக்கும் புரட்டுகளையும் வெளிப்படுத்தி "அறிவு இயக்கத்தை"ப்பரவச் செய்தனர். இன்றும் இத்தகையோர் பிற நாடுகளில் சங்கங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும், தர்க்க முறையான சொற்பொழிவுகள் மூலமாகவும் அறிவு இயக்கத்தைப் பரப்பி வருகின்றனர். மேல்நாடுகளில் பகுத்தறிவைப்பரப்பவும், கடவுள் மதப்புரட்டுகளை வெளியாக்கவும் பல ஆயிரக்கணக்கான பத்திரிகைகள், பதினாயிரக் கணக்கான, லக்ஷக்கணக்கான பிரதிகளாக உலவுகின்றன.

ஆகவே, பல நூறு வருஷங்களுக்கு முன்பிருந்தே இயங்கிவரும் அறிவுக்கொள்கை, மக்களுக்குப் போதிய மன உறுதியும் தைரியமும் இல்லாததாலும், கொள்கையைப் பரப்புவதற்கு ஏற்ற சாதனங்கள் இன்மையாலும், பொதுவாகவே உலகத்தில் போதிய கல்வி இல்லாமையாலும், அதிதீவிரமாய்ப் பரவும் சந்தர்ப்பமில்லாது போயிற்று. இன்று இக்குறைபாடுகளெல்லாம், உகத்தில், கொஞ்சங் கொஞ்சமாக நீங்கிக் கொண்டே வருவதால், இனி இக்கொள்கைகளைச் சுலபத்தில் தடுக்கவோ அழிக்கவோ முடியாது.

பல நாடுகளில் பல சந்தர்ப்பங்களில் பலவேறு பெயர்களோடு வழங்கப்பட்டுவந்த இவ்"வறிவு இயக்கமானது" 10 ஆண்டுகளாக நம் தமிழ் நாட்டில் "சுயமரியாதை இயக்கம்" என்னும் பேரால் தோழர் ஈ. வெ. இராமசாமியவர்களால் துவக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய இயக்கத்தின் கொள்கைகளை அடிப்படையாக வைத்து "குடி அரசு" என்னும் ஒரு வாரப் பத்திரிகை 10 ஆண்டுகளாக எவ்வளவோ எதிர்ப்பு, கஷ்ட நஷ்டங்களுக்கிடை நடந்துவருகிறது. இப்போது பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகச் சார்பாய் பகுத்தறிவு என்னும் மாதப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இது மக்கள் பகுத்தறிவு பெற வேண்டும் என்னும் ஒரே ஆவலை முன்னிட்டு நடைபெறுமேயன்றி வேறு எவ்வித கைமாறும் கருதாமல் நடைபெறப் போவதால் இதில் உள்ள குற்றம் குறைகளைப் பொறுத்து இதன் ஆசையையும், நோக்கத்தையும் மாத்திரமே மதித்து ஆதரவளிக்க வேண்டியது பொது மக்கள் கடமையாகும்.

# "விதண்டா வாதம்"

ஈ. வெ. ரா.

இந்துக்களின் வேதம் கடவுளால் சொல்லப்பட்டது என்றால் கிருஸ்தவர்கள் வேதம், முகம்மதியர்கள் வேதம், முதலிய வேதங்கள் யாரால் சொல்லப்பட்டன?

பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், ஆகியவர்களைத்தான் கடவுள் பிரம்மாவின் தலை, தோள், இடுப்பு, ஆகியவைகளில் இருந்து உற்பத்தி செய்தார் என்றால், கிருஸ்தவர், மகம்மதியர், ஜப்பானியர், (பௌத்தர்) நீக்கிரோவர், முதலாகியவர்களை யார் எதில் எதில் இருந்து உண்டாக்கினார்கள்?

ஏசுகிருஸ்து, மகம்மது, சங்கரர், ராமனுஜர், முதலியவர்களை ஜனங்கள் நன்மைக்காக கடவுள் உலகத்துக்கு அனுப்பினார் என்றால், இவர்களை மறுக்கும் ராமசாமி, ராகவன், சிங்காரவேலு, சிதம்பரனார், ஜீவாநந்தம் முதலியவர்களை எதற்காக யார் அனுப்பினார்கள்?

பூமியை ஆதிசேஷன் தாங்குகிறான் என்றால் ஆதிசேஷனை யார் தாங்குகிறார்கள்?

சுப்பரமணியக்கடவுளுக்கு ஆறுதலைகள் என்றால் அவன் படுத்துத் தூங்கும்போது தன் தலைகளை எந்தப்பக்கம் எப்படி வைத்துத் தூங்குவான்?

மகாவிஷ்ணுவினுடைய வாகனமாகிய கருட பக்ஷியைக் கண்ட மாத்திரத்தில் கும்பிட்டு வணக்கம் செலுத்தும் மக்கள் மகா கணபதி வாகனமாகிய பெருக்கானைக் (பெருச்சாளி) கண்டால் ஏன் உடனே தடியெடுத்துக்கொண்டு அடித்துக் கொல்லுவதற்காக ஓடுகிறார்கள்?

அவதார புருஷர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், நபிமார்கள், ஆண்டவனால் அனுப்பப்பட்டார்கள் என்றால் அயோக்கியர்கள், திருடர்கள், கொலைகாரர்கள், விசுவாசத் துரோகிகள் முதலியவர்கள் யாரால் அனுப்பப்பட்டவர்கள்?

உலகமும் உலகத்திலுள்ள ஒவ்வொரு தனிப்பொருளும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது என்கிறார்கள். மதவாதிகள் இதை ஒப்புக்கொள்ளாதவர்களை நாஸ்திகர்கள் என்கிறார்கள். அப்படியே வைத்துக் கொள்ளுவோம்! கடவுளால் எப்படி சிருஷ்டிக்கப்பட்டது?

மனுதர்ம சாஸ்திரத்தில் மனுதேவர் சொல்லியிருக்கின்ற படியா?

கிருஸ்துநாதர் பைபிளில் சொல்லி இருக்கின்றபடியா?

முகம்மதுநபி கொரானில் சொல்லி இருக்கின்றபடியா? எந்த முறைப்படி?

## நாத்திகர்களுக்குத்தான் மூளை அதிகம்.

இதுவரை மனிதர்களின் மூளைகளைப் பரிசோதித்துப் பார்த்ததில் (Cuvier) கவியர் என்கின்ற ஒரு இயற்கை வாதிக்குத்தான் அதிகமான மூளை இருந்திருக்கிறது.

அவர் மூளையின் எடை 1830 கிராம். அதற்கடுத்தாற் போல் ஹெர்பட் ஸ்பென்சருக்கு அதிக மூளை இருந்திருக்கிறது. அவர் மூளையின் எடை 1660 கிராம் என்று கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது.

ஆகவே மனித சமூகத்தில் அதிக மூளையுள்ளவர்கள் நாத்திகராகத்தான் இருக்கமுடியும்.

கடவுள் தங்களுக்கு நன்மை செய்ததற்காக நன்றி செலுத்தவேண்டும் என்று சிலர் சொல்லுவதானால், கடவுள் பலருக்குத்தீமை செய்ததற்காக தீமையை அநுபவிப்பவர்கள் கடவுளை என்ன செய்ய வேண்டும்?

ஈ. வெ. ராமசாமி.

# கடவுளை யார் படைத்தார்?

[மாணிக்லால் ஹேச். வக்கீல்.]

[இக்கட்டுரையில் உலகம், உலகப்பொருள்கள் உற்பத்தியைப் பற்றி மதவாதிகள் கொண்டிருக்கும் குருட்டு நம்பிக்கைகளையும், அவைபற்றி விஞ்ஞான நிபுணர்கள் ஆராய்ந்து கூறும் கொள்கைகளையும், மதவாதிகளின் கூற்றை நம்புவதனால் ஜனசமூகத்திற்கு உண்டாகும் தீங்குகளையும்விளக்கி எழுதப்பட்டிருக்கின்றது. ப-ர்.]

மக்களைக் கடவுள் படைத்தாரென்று மனிதர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் கடவுளை யார் படைத்தாரென்று ஒருவரும் சொல்லுவதில்லை. கிறிஸ்து பிறப்பதற்கு 4004 வருடங்களுக்கு முன்பாக அக்டோபர் மாதம் 23-ந்தேதி திங்கள் கிழமைக்கும், அக்டோபர் மாதம் 28-ந்தேதி வெள்ளிக்கிழமைக்குமிடையில் கடவுளினுடைய ஒரு தனி சக்தியினால், இந்தப்பூமியும், பூமியிலுள்ள சராசர வஸ்துக்களும் உண்டாக்கப்பட்டதென்று அமெரிக்கா, ஐரோப்பா முதலிய தேசங்களின் 50 வருடங்களுக்கு முன்னிருந்த சரித்திர புஸ்தகங்களிலும், தற்காலம் வேறுசில இடங்களிலுள்ள சரித்திர புஸ்தகங்களிலும் காணப்படுகின்றன ஆனால் இது கிறிஸ்து மார்க்கத்தை முன்னிட்டே ஒரு உண்மையாக விளங்கி வந்தது. என்றாலும், கிறிஸ்துவர்களும் இதை மறுக்க முடியாத உண்மையென்றே நம்பி வந்தார்கள்.

ஆனால், இப்பொழுது வரவர இந்தக்கொள்கை விஞ்ஞான சாஸ்திரிகளால் மறுக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டு விட்டது. அப்படியிருந்தும், அநேககோடி யூதர்களும், கிறிஸ்துவர்களும், முகம்மதியர்களும், தங்களறியாமையின் பயனாய் கடவுளே இப்பிரபஞ்சத்தைப் படைத்தாரென இன்னும் நம்பிக்கொண்டிருக்கின்றார்கள். யூதர்களாலும், கிறிஸ்துவர்களாலும், முகமதியர்களாலும், பொதுவான தீர்க்கதரிசியெனக்கருதப்படும் மோசஸ் என்பவரே முதல் முதல் கடவுள் என்பதாக ஒன்றை ஏற்படுத்தி, அக்கடவுள் தான் இப்பிரபஞ்சத்தைப் படைத்தாரென சித்தாந்தப்படுத்தினராவர். அதை இயேசுநாதர் அவர்களும், முகமதுநபி அவர்களும், அப்படியே ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

ஜொராஸ்டர, பௌத்த, ஹிந்து ஆகிய மதக்கொள்கை களைக்கொண்ட தத்துவ சாஸ்திரங்கள் இப்பிரபஞ்சங்கள் அநேகமென்றும், அவைகள் காலம், எல்லை முதலியவைகள் ஒன்றும் குறிக்கப்பட முடியாதனவென்றும், அடிக்கடி மாறு தல் அடையக்கூடியவென்றும், எந்தக்காலத்தில், எப்படிப் படைக்கப்பட்டவெனச் சொல்ல முடியாததென்றும், அவைகள் மனிதனால் அறிந்துகொள்ள சாத்தியப்படாதவைகளெனவும் கூறுகின்றன. எப்படியிருந்தபோதிலும், அவர்களும் ஒரு கட வுளையோ பல கடவுள்களையோ கற்பித்துக்கொண்டு, அக்க டவுள் சர்வ சக்தியும், சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும் பொருந்தியவரென்றும், அவர் தானாகவே உண்டானவரென் றும், சாதாரண மனிதனாலறிந்து கொள்ளமுடியாதவரென் றும், ஞானிகளால்தான் அறிந்துகொள்ளக்கூடியவர் எனவும் சொல்லுகின்றார்கள்.

இவ்விரண்டு கொள்கைக் காரர்களும் தங்கள் தங்கள் மக் கள் ஜனசமூகத்தில் ஒழுக்கத்துடனும், நியாயத்துடனுமிருக்க வேண்டுமென்றும், அதற்குக்கடவுள் பயமிருக்க வேண்டியது அவசியமென்றும், மற்றும் மனிதன் ஆசையிலிருந்து விலகி, திருப்தியும், சாந்தமும் அடையும் பொருட்டும், தனக்குவரும் கஷ்டங்களுக்கு ஒரு சாந்தி ஏற்படுத்தவும் கருதி தங்கள் கடவு ளைச் சிருஷ்டித்திருக்கின்றார்கள்.

இவ்விரண்டு கொள்கைக்காரர் களிலும் முதல் கொள் கைக்காரர்களான அதாவது யூதர், கிறிஸ்துவர், முகமதியர் களால் உலகமானது சர்வ சக்தியுள்ள கடவுளால் படைக்கப் பட்டதெனவும், இரண்டாவது கொள்கைக்காரர்களான ஜொராஷ்டர, பௌத்த, இந்துமதக்காரர்களால் ஆதியந்த மில்லாததும், நிலையாததுமாயுள்ள இந்தஉலகம் யாராலும் படைப்பிக்கப்படாமல் இருந்து வருகின்றதெனவும் சொல்லப் பட்டு வருகின்றன.

ஆனால் விஞ்ஞான சாஸ்திரிகள் இந்த உலகம் கடவுள் களால் படைக்கப்பட்டதென்கிற மூட எண்ணத்தையும், பொய்யான அபிப்பிராயங்களையும் பாமர மக்களிடத்திலி ருந்து விலக்கி, அவர்களுக்குச் சிருஷ்டித் தன்மையின் உண் மையை எடுத்துரைத்து, அறிவாளிகளாகச் செய்ய வேண்டு மென்று கருதி, கடவுள் அல்லது கடவுள்கள் என்பது மனித னுடைய கற்பனை யென்பதை வலியுறுத்த முயற்சி செய்து கொண்டு வருகின்றார்கள்.

அப்படி முயற்சிப்பதில், மனிதர்களுக்குக் கொஞ்சம் நடு நிலைமைப்புத்தியும், ஆராய்ச்சித்தன்மையும் மிக்க அவசியமானதாகும். சாதாரணமாக, பகற்காலத்தில் நாம் சூரியனையும், இருண்ட மேகங்களில்லா இராக்காலங்களில் நக்ஷத்திரங்களையும் பார்க்கின்றோம். ஒரு நல்ல சக்தியுள்ள, தூரதிருஷ்டியுள்ள கண்ணாடியின் மூலம் வானத்தைப் பார்ப்போமானால், கண்ணாடியின் சக்திக்குத் தகுந்தபடி இன்னும் அதிகமான நக்ஷத்திரங்களை நாம் காணலாம். அவைகளில் சில நக்ஷத்திரங்கள் சூரியனைவிடப் பெரியதாகவும் அதிக உக்கிரமுடையதாகவும் கூட இருக்கின்றன. ஆனால், அவை நம்மிடமிருந்து 93,00,0000, மைல் தூரத்துக்கப்பாலிருப்பதாகக் கணக்கிடப்பட்ட சூரியனை விட அதிக தூரத்திலிருப்பதால், நமது கண்களுக்குச்சிறிய நக்ஷத்திரங்கள் போலவே அவைகள் காணப்படுகின்றன. சூரியனும், இந்த நக்ஷத்திரங்களும், ஒரே விதமான இரசாயனப் பொருள்களையே கொண்டதாயிருந்துகொண்டு, அதிகபிரகாசமாகவுமிருந்து வருகின்றது.

காலம் குறிப்பிட முடியாத ஒரு காலத்தில் நமது பூமியென்னும் கிரஹமானது சூரியனிடத்திலிருந்து ஒரு ஆவி பிண்டமாய்ப் பிரிந்து வந்து, பிறகு கிரஹ மண்டலத்தில் ஒரு கண்டமாகி, மத்தியை நாடுகிற ஒருவித சக்தியாலும், மத்தியிலிருந்து விலகுகிற ஒருவித சக்தியாலும் சுற்றப்பட்டு வந்தது. சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனிமுதலான இதர கிரஹங்களும், நமது பூமியைப்போலுள்ள சிறு துண்டு, துணுக்குகளேயாகும். நமது பூமிக்கொரு சந்திரனிருப்பது போலவே, அவைகளுக்கும் ஒவ்வொரு சந்திரனுண்டு. நமது சந்திரன் நமது பூமியைப்பிரதி சந்திர மாதத்திலும் சுற்றிவருவது போலவே, அவைகளையும் அவைகளின் சந்திரன்களும் பிரதி சந்திர மாதங்களிலும் சுற்றி வருகின்றன.

பூமியானது ஆவிபிண்டத்திலிருந்து மாறி, அதன் மேற்பரப்பில் தற்போது காணப்படும் வைரம் பொருந்திய நிலைமையை அடைய வேண்டுமானால் சுமார் 800,000,000 வருடங்கள் சென்றிருக்கவேண்டுமென பூகோள உறுப்பிலக்கண சாஸ்திரிகள் கணக்கிடுகின்றார்கள். பல கோடி வருஷங்களுக்கு முன் சிருஷ்டியாயிருக்கக்கூடிய பிரமாண்டமான கல்மலைகள் யாவும், இப்பொழுது பல விடங்களில் மனிதர்களுக்குப் புலனாகின்றன. சூரியனிடத்திலிருந்து நமது பூமியானது பிரிந்து இப்பொழுது 12,000,000,000 வருடங்களாகின்றன என நாம்

வைத்துக்கொண்டு, இவ்வருஷங்களை 12 மணி வீதம் பிரிக்கப்பட்டுள்ள நமது சாதாரண கடிகார அளவுப்படி பங்கிடுவோமானால், அப்பொழுது பூகோள உறுப்பிலக்கணக் காலமென்று கூறப்பட்ட 800,000,000 வருடங்களும் 4 $\left\{\frac{8 \times 60}{120}\right\}$ நிமிடங்களுக்குத்தான் சமமாக விருக்கும்.

இந்த 800,000,000 வருடங்களிலும், ஜீவராசிகள் இவ்வுலகில் தோன்றுவதற்கு முன்னமேயே 470,000,000 வருடங்கள் வரையிலும் கழிந்திருக்க வேண்டுமென்றும், பாக்கியுள்ள 330,000,000 வருஷங்களின் போதுதான் ஜீவராசிகள் இவ்வுலகில் உண்டாயிருக்க வேண்டுமென்றும், பூகோள உறுப்பிலக்கண சாஸ்திரிகளும், தாவரவர்க்க-ஜீவவர்க்க சாஸ்திரிகளும் கணக்கெடுத்திருக்கின்றார்கள்.

இந்த 330,000,000 வருடத்திலும், ஊர்வன, பறப்பனவாகிய ஜந்துக்களும், மூலைப்பாலுண்டு வளரக்கூடிய ஜந்துக்களும் இந்த நமது பூமியில் தோன்றுவதற்கு 225,000,000 வருடங்களுக்கு முன்னமாகவே முதுகெலும்பில்லாத ஜீவராசிகளும், மீன்களும், நீரிலும் நிலத்திலுமாகிய இரண்டிலும் வாசஞ்செய்யக்கூடிய தன்மையுள்ள ஜீவராசிகளும் பூமியில் உற்பத்தியாயிருக்க வேண்டுமெனவும் அவர்கள் கருதுகின்றார்கள். மூலைப்பாலுண்டு வளரக்கூடிய ஜீவராசிகள் தோன்றி 25,000,000 வருடங்களுக்கப்பால்தான், அதாவது இன்றைக்குச்சுமார் 1,200,000 வருடங்களுக்கு முன்பாகத்தான் மனிதன் முதன் முதலாக இவ்வுலகில் தோன்றியிருக்கவேண்டும்.

உலகத்தில் தோன்றி, நடமாடிக்கொண்டிருக்கும் எல்லா ஜீவராசிகளிலும் மனிதனே எவ்வாறு மிக்க உயர்ந்த ஜீவராசியென்பதையும், தன்னுடைய வெளி அவயவங்களாலும், தன்னைச் சுற்றிலும் காணப்படக்கூடிய பொருட்களாலும் தன்னுடைய மூளையினுதவியினாலும், இதர உள் அவயவங்களினுதவியாலும் அவன் தனது அறிவை விலாசப்படுத்திக்கொண்டுவருகின்றானென்பதையும் ஜீவசாஸ்திரத்தின் மூலாதார உண்மைகளால் பாமர மக்களும் எளிதிலுணர்ந்துகொள்ள முடியும்.

சரித்திர ஆராய்ச்சியின்படி, எகிப்து தேசத்தின் நாகரீக காலத்திலிருந்து தான் மனிதன் இவ்வுலகில் தோன்றி எத்தனை வருடங்களாயினவெனக் கணக்கிடப்படுகின்றது.

அவ்வாறு நாம் கணக்கிட்டோமானால், இன்றைக்குச் சுமார் 10,000 வருடங்களுக்கு முன்பாகத்தான் மனிதன் நமது உலகில் முதன் முதலாகத் தோன்றியிருக்க வேண்டுமென்றேற்படுகின்றது. ஆனால் மோசஸ், இயேசு, முகம்மது ஆகியவர்களின் உபதேசங்களின்படி மனிதன் முதலில் தோன்றிய காலத்தைக் கணக்கிட்டோமானால், அப்பொழுது நமது புராணங்களின்படி, ஆதாம் எனக்கூறப்பட்ட ஆதி மனிதன் உலகில் தோன்றிய, அதாவது கிறிஸ்து பிறப்பதற்குமுன் 28—10—4004 தேதியாகிய ஒரு வெள்ளிக்கிழமை காலையென ஏற்படுகின்றது.

ஆனால், மேலே இதுவரையிலும் கூறப்பட்டு வந்தவைகளிலிருந்து, இக்காலமானது இன்னும் எத்தனையோ மடங்கதிகமானதென விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாய் ஏற்பட்டுவிட்டது. மனிதனின் புராதன சரித்திரமானது ஈயோலித்திக் எஜ் (Eolithic Age) என்று கூறப்பட்ட காலத்திலிருந்து தான், அதாவது சுமார் 4000 வருடங்களுக்கு முன்பாகவிருந்துதான் ஆரம்பித்து, புதுக்கல்யுகம் (New Stone Age) என்று சொல்லப்படும் காலத்தில்தான் அதாவது சுமார் 1500 வருடங்களுடன் முடிவடைகின்றது.

புதுக்கல்யுக (Neolithic Age) ஆரம்பகாலத்திலிருந்து உலோகங்கள் (Age of Metals) கால ஆரம்பம் வரையிலும், மனிதனால் முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட எழுத்துப் பதிவுகள்ஏற்பட்ட, அதாவது கிறிஸ்து பிறப்பதற்குமுன் 4000 வருடங்கள்வரை உள்ள காலமும் மத்திய சரித்திரக் காலத்திலடங்குவதாகத் தர்க்க சாஸ்திர முறையில் வேண்டுமானால் உரைக்கலாம்.

கிறிஸ்து பிறப்பதற்கு 4000 வருடங்களுக்கும் முன்பிருந்து, இயந்திரத் தொழில் புரட்சியேற்படும் வரையிலும், அதாவது கிறிஸ்து சகாப்தத்தின் 18-வது நூற்றாண்டின் மத்திய காலம் வரையிலும் நவீன சரித்திர காலமெனக் கூறலாம்.

மனித வர்க்கங்களின் சமூக வாழ்விலும், கிருஷித் தொழிலிலும் இதுவரையிலும் ஏற்படாதிருந்த மகா உன்னதநிலைமையை மனிதன் இப்பொழுது அடைந்திருப்பதினால், அதாவது இயந்திரத் தொழில் புரட்சிக்குப் பிறகு ஏற்பட்டிருக்கக்கூடிய காலந்தான் தற்காலமெனக் கூறப்படவேண்டும்.

சிருஷ்டியின் தத்துவத்தைப்பற்றி மோசஸ என்பவரால் கூறப்பட்டு வந்த கொள்கைகளை விஞ்ஞான சாஸ்திரிகளென்பவர்கள் சிறிதும் ஒப்புக்கொள்ள மாட்டார்களென்பது, நாம் மேலே கூறிக்கொண்டு வந்தவைகளால் விளங்கியிருக்கும். ஆனால், பூர்வீக தத்துவ சாஸ்திரிகளால் கூறப்பட்ட தர்க்க சாஸ்திரத்தின் ஒழுங்கின்படியாகக் காணப்படுவதை, அல்லது தர்க்க சாஸ்திர தத்துவங்களின்படி ஊகித்துணரப்பட்ட உண்மைகளாக காணப்படுபவைகளை, அதாவது இப்பிரபஞ்சம் எப்பொழுதும் இருந்து வரக்கூடியதென்பதையும், அடிக்கடி மாறும்படியான இயல்புள்ளதென்பதையும், ஆதியும் அந்தமுமில்லாததென்பதையும் ஒத்துக்கொள்ளுகின்றார்கள்.

இவைபோன்ற காரணங்களால் கடவுள் மனிதனையாவது அல்லது எல்லையற்ற இவ்வகண்ட, பெரிய, பிரபஞ்சத்தையாவது உண்மையாகவே சிருஷ்டிக்கவில்லையென்றும், தீர்க்கதரிசிகளும், தத்துவ சாஸ்திரிகளும், ஒரு கடவுளையோ அல்லது அநேக கடவுள்களையோ தங்களுடைய மனோ சக்தியினால் கற்பனை செய்துகொண்டு வந்திருப்பார்களென்பதும் நன்றாய் விளங்குகிறது.

இப்பிரபஞ்சத்தில் காணப்படும் எல்லாவித ஜீவராசிகளும் தங்களுக்குள்ளாக கிரியா (Kinetic) அல்லது தாமத (Potential) சக்தியை அடக்கிக்கொண்டிருக்கும் சலனத் தன்மையுள்ள பொருட்களென்றே விஞ்ஞான சாஸ்திரிகள் எண்ணிக்கொண்டு வருகின்றார்கள். மேலும், இப்பிரபஞ்சத்தின் இதர பாகங்களின் வேகத்தினாலும், ஆவேசத்தினாலும், இப்பிரபஞ்சத்தின் சில பாகமானது பலவித மாறுபாடுகளடையக்கூடிய தன்மையுள்ளதெனவும் அவர்கள் கருதுகின்றார்கள்.

மக்கள் தீமை செய்தால் கடவுளால் தண்டிக்கப்பட்டு நரகத்திற்குச் செல்ல நேரிடுமென்று பயந்தோ, அல்லது மனித வர்க்கத்திற்கு நன்மை செய்தால் மோக்ஷ லோகம் கடவுளால் அளிக்கப்படுமென்று நினைத்தோ மனித சமூகத்தில் ஒழுங்காயும் கிரமமாயும் நடந்துகொள்வதற்கு மக்களுக்கொரு கடவுள் வேண்டுமென்ற அவசியமேயில்லை எனவும் அவர்கள் கருதி, மக்கள் யாவரும் மகத்தான சந்தோஷத்தையும், சவுக்கியத்தையும், நன்மையையும் அடைந்தின்புறும் பொருட்டு, தங்களுக்கும், பிறருக்கும் உதவி செய்தலே பெரிய தருமமென்

றெண்ணி, அக்காரியத்தில் அவர்கள் ஈடுபட்டு, இதர ஜன சமூகங்களின் வாழ்க்கைகளை அனுசரித்து தங்களுடைய ஒழுக்கங்களையும், நடத்தைகளையும் சீர்திருத்திக் கொள்ளுகின்றார்கள்.

மக்கள் தங்களுடைய அகம்பாவத்தையும், அகங்காரத்தையும் சுயநலக் கொள்கைகளையும், காமத்தையும் விடுத்து, அதிக பணத்திற்கும், அளவிலா அதிகாரத்திற்கும், எல்லையற்ற கௌரவத்திற்கும் வீணாசை கொள்வதையும் விடுத்து, அல்லது "அதிக ஆசை அதிக நஷ்டம்" என்பதை அறிந்து பேராசையின்றியும், பொறாமையும், குரோதமும் பரஸ்பரமும் சேதமுமில்லாதிருக்கும்படியான ஓர் உயர்ந்த உன்னத மேன்மை பொருந்திய நிலைமையை அடைய வேண்டுமானால் பிறருக்கு உதவி புரிந்து கொண்டு வரவேண்டுமெனவும் அவர்கள் கருதுகின்றார்கள்,

கடவுள் என்கிற தத்துவ மனோபாவத்திலுள்ள ஒரு வித நம்பிக்கை, ஆன்மாவிற்கெப்பொழுதும் அழிவில்லையென்னும் எண்ணம், அவரவர்கள் இவ்வுலகத்தில் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்றவாறு அவரவர்களிறந்தபின் அவரவர்களுக்களிக்கப்படும் மோக்ஷம் அல்லது நரகமாகிய எண்ணங்கள், அல்லது அவரவர்களின் செய்கைகளுக்கேற்றாற்போல் அவரவர்கள் இறந்த பிறகு அவரவர்களுக்கேற்படும் மறு ஜன்மங்கள் ஆகிய நம்பிக்கைகள் மக்களை ஜன சமூக வாழ்வில் சிறிதளவாவது நேர்மையாகவும், ஒழுங்காகவும் நடந்து கொள்ளும்படி செய்கின்றன என்று சொல்லலாம்.

ஆனாலும், மேலே கூறப்பட்ட அதே நம்பிக்கையானது மனிதனை பூர்வாசாரங்களை விடக்கூடாதென்கிற அபிமானமுள்ள பிடிவாதக்காரனாகச் செய்து விடுவதுடன், ஜன சமூக சுபாவத்தின் சீர்திருத்தங்களுக்கு விரோதமுடையவனாகவும் செய்து விடுகின்றது.

மேலும் அந்நம்பிக்கை அவனை மனிதர்களின் நன்மையை அதிகப்படுத்தக்கூடியதான மகத்துவம் பொருந்திய இயந்திர இரசாயன சக்திகளை மனிதனால் அடக்கி, ஆளக்கூடிய சக்தியும், அதைத்தன் வசப்படுத்தக்கூடிய சக்தியும் இருக்கின்றதென்னும் எண்ணங்களையும் அவனுடைய மனதினின்று அகற்றி அவனைக்கோழையாகவும் செய்துவிடுகின்றது. ஆகையால் இவ்வெண்ணங்களானவை பாமர மக்களுக்குப் போதை

யை (மயக்கத்தை) யளிக்கத் தக்க அபினி கலந்த ஓர் மருந்து போலிருந்துகொண்டு வருகின்றது.

மக்களின் இத்தகைய எண்ணங்களானவை அவர்களை மடாதிபதிகளுக்கும், மதகுருக்களுக்கும், மதபோதகர்களுக்கும் பயபக்தியுடன் அடங்கி நடந்துவரும்படி செய்துகொண்டு வருவதுமல்லாமல், அவர்களை எதிர்த்துப் போராடாதிருக்கும்படியாகவும் செய்து வருகின்றது.

மேலும் இதே நம்பிக்கையானது அவர்களை இவ்வுலகில் தாங்கள் அனுபவித்து வரும் எல்லாவித கஷ்டங்களும் தங்களுடைய நன்மைக்கேதான் என்று எண்ணும்படியாகச் செய்வதுடன், அவ்வித கஷ்டங்களும், துன்பங்களும், ஒருவராலும் அறிந்துகொள்ள முடியாதவரும் கருணைக் கடலாக விளங்குபவரும், சர்வ தயாபரரும், சர்வ ஞானியுமாக உள்ள கடவுளால்தான் மக்களின் நன்மைக்கே, மக்கள் ஈடேறும் பொருட்டே, மக்கள் உய்யும்பொருட்டே அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர்களைக் கருதும்படி செய்து விடுகின்றது.

---

பழைய சம்பிரதாயங்களைப்பற்றிக் கவலையில்லை. பறையர்கள் என்று சொல்லப்படுகிறவர்களை விட பிராமணர்கள் தான் கல்வி கற்கத்தகுதியுள்ளவர்கள்; சக்தியுள்ளவர்கள்; பரம்பரை வழக்கமும் அதுதான்; என்றால் பிராமணர்களின் படிப்புக்காக ஒரு காசுகூடச்செலவு செய்யக்கூடாது. பறையர்கள் என்று சொல்லப்படுபவர்களின் படிப்புக்கே எல்லாப்பணத்தையும் செலவு செய்ய வேண்டும்; சக்தியற்றவர்களுக்குக் கொடுப்பதே உசிதம். அவர்களுக்கே எல்லா உதவியும் தேவை. பிராமணன் சாமர்த்தியசாலியாய்ப் பிறந்தவனாதலால் மற்றவர்களுடைய உதவியின்றியே கல்வி கற்றுக்கொள்ளலாம். மற்றவர்கள் சாமர்த்திய சாலிகளாய்ப் பிறக்கவில்லையென்றால் அவர்களுக்கு வேண்டிய சவுகரியங்களை அமையுங்கள்.

சுவாமி விவேகானந்தர்.

# டாக்டர் பராஞ்சிபை.

[அ. இராகவன்.]

இந்தியாவிலுள்ள பேராசிரியர்களில் டாக்டர் பராஞ்சிபை ஒருவராகும். இந்தியாவிலுள்ள அறிஞர்களில் பெரும்பாலோர் தனது நம்பிக்கை எதுவாயினும் பேச்சில், எழுத்தில், வேடத்தில் ஒரு பெரும் ஆஸ்திகராகவும், மதபக்தராகவுமே நடிப்பர். பொதுஜனங்களின் மூட நம்பிக்கை, பழக்க வழக்கம் இவைகளைக் கண்டித்தால் தனது கௌரவம் போய்விடுமென்று நம்பி அவைகளைப் போற்றிப் புகழ்ந்து பொது மக்களின் ஆதரவைப் பெரிதும் பெற்று வருவார்கள். ஆனால் அறிஞர் பராஞ்சிபை இக்குழுவிற்கு முற்றும் விலக்கானவர். எதெதை தான் உண்மை என்று காண்கிறாரோ, எதெதைத் தவறு என்று அறிகிறாரோ அவைகளை அஞ்சாது வெளிவிட்டு வரும் ஓர் அரிய வீரராவார்.



டாக்டர் R. P. பராஞ்சிபை அவர்களின் ஆதரவில்லாதிருந்தால் வட இந்தியாவில் பகுத்தறிவு இயக்கம் (Rationalist Movement) எளிதில் தோன்றியிருக்கமுடியாது. 1913ல் லண்டன் பகுத்தறிவுச்சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் இந்தியா

வுக்குப்போந்து டாக்டர் பராஞ்சிபை அவர்களைக் கண்டு பேசி இந்தியாவில் பகுத்தறிவு இயக்கத்தைப் பரப்பவே தான் வந்திருப்பதாகக்கூறினார். டாக்டர் அவர்கள் இந்தியாவில் பகுத்தறிவு ஜோதி பிரகாசிக்கச் செய்யத் தன்னாலான எல்லா உதவியையும் செய்வதாக உறுதி கூறினார். அதன்பின்னர் தான் லண்டன் பகுத்தறிவு நூற்பிரசுர சபையின் கிளை நிலையம் ஒன்று பம்பாயில் நிறுவப்பட்டது. முதன் முதலில் டாக்டர் பராஞ்சிபை அவர்கள் தலைவராகவும், டாக்டர் C. L. டிவாய்ன் M. D. (Dr. c. L. Dvoine M. D.) அவர்கள் காரியதரிசியாகவுமிருந்து சங்கத்தை மிகச் செம்மையான முறையில் நடத்தி வந்தார். பின்னர் பராஞ்சிபை அவர்கள் தனது உத்தியோகங் காரணமாய் வெளியிடங்களுக்குச்செல்லவே இப்பொழுது காங்கிரஸ் சார்பாக இந்திய சட்டசபைக்கு ஓர் அபேட்சகராக நின்று வெற்றிபெற்ற Dr. தேசமுக M. D. M. L. A. அவர்கள் தலைவராயிருந்து வருகிறார். இச்சங்கத்தினின்றே அறிவு (Reason) என்ற மாதாந்தரப் பத்திரிகையும் வெளியிடப்பட்டு வருகிறது.

நமது பராஞ்சிபை அவர்கள் பம்பாயில் கல்வி பயின்று பின்னர் உயர்தரப் படிப்பிற்காக இங்கிலாந்து சென்று கேம்பிரிட்ஜ் கல்லூரியில் விஞ்ஞானப் பேராசிரியர் (D. Se.) என்ற பட்டம் பெற்றார். அதன் பின்னர் இந்தியாவிற்கு வந்து புனாவிலுள்ள பெர்கூசன் கலாசாலையில் கணித ஆசிரியராய் இருந்தார். அவரது திறமையைக் கண்டு தலைமையாசிரியராய் நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் லண்டனில் இந்தியாக்கவுன்சிலில் ஓர் உறுப்பினராகவுமிருந்தார். அதன் பிறகு பம்பாய் சட்டசபை உறுப்பினராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டு 3 ஆண்டு கல்வி மந்திரியாக இருந்து பல அரிய தொண்டாற்றி வந்தார். இப்பொழுது அவர் லக்னவ் சர்வகலாசாலையில் உப அத்தியட்சகராக இருந்து வருகிறார்.

இவர் அரசியல் கொள்கையில் ஓர் மிதவாதி. ஆனால் அறிவியல் கொள்கைகளில் ஓர் ஒப்பற்ற புரட்சிக்காரர். இவரது புகழ் மேனாடெங்கும் பரவி வருகிறது. இவரால் எழுதப்பட்ட இந்தியாவின் குறைபாடுகள் (The Crux of the Indian broblem) என்ற அரிய நூல் லண்டன் பகுத்தறிவு நூற் பிரசுர சபையாரால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு லட்சக்கணக்காய் செலவாகி வருகிறது. அந்நூலை நமது குடி

அரசுப்பதிப்பகத்தாரும் "இந்தியாவின் குறைபாடுகள்" என்ற பெயரால்மொழிபெயர்த்து விற்பனை செய்து வருகிறார்கள்.

அவர் தம் நூலில் மதவாதிகளைப்பற்றி எழுதும் பொழுது "தற்கால விஞ்ஞான சாஸ்திரங்களின் அறிவானது உண்மையாகவே, வேதங்களின் கோட்பாடுகளுக்கு விரோத மாகவே இருக்கின்றது. வேதத்தில் நம்பிக்கையுள்ளவர்களும், வேதக்கொள்கையுடையவர்களும் எக்காலத்திலும், எந்நாட்டிலும் விஞ்ஞான சாஸ்திரங்களின் முற்போக்கைக் கொலை செய்து தங்களுடைய மூட ஆதிக்கத்தை நிலை நாட்ட முயன்றிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் தங்கள் இழிசெய்கைகளில் வெற்றியடைந்தார்களில்லை. அதற்கு மாறாக அவர்கள் எப்பொழுதும் தோற்கடிக்கப்பட்டு, பின்னோக்கிச் செல்லும்படியாக நேரிட்டது" என்றும்

அவர் புரோகிதர்களைப்பற்றிக் கூறும்பொழுது "கிறிஸ்து மதத்திலே போப்பு, பிஷப்பு, பாதிரிகள், கன்னிகாஸ்திரீகள் எனப்படுவோரும்; இஸ்லாமிய மதத்திலே உயர்ந்த குருக்கள், மௌல்வி, காஜி, பக்கிரிகளெனப் படுவோரும், இந்துமதத்திலே சங்கராச்சாரியார்கள், மகந்துக்கள், சாதுக்கள்; சந்நியாசிகள் இன்னும் பல வெறும் பிக்ஷாடன மூர்த்திகளாகத் திரியும் பக்தர்களுமிருக்கின்றனர். இவர்களைத் தவிர வேறு மதத்தில் உள்ள திருக்கூட்டத்தார்களும் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு ஜன சமூகத்திலு மிருந்து கொண்டு அவரவர் முன்னேற்றத்தையே முதன்மையாகக் கொண்ட சுயநலப் புலிகளாக விளங்குவதோடு அதற்காக அவர்களைப் பின்பற்றுகிறவர்களின் மனோ புத்திகளை விலங்கிட்டாற் போல் தடுப்பதிலே கண்ணும் கருத்துமாய் இருந்து காலங்கழித்து வருகிறார்கள்."

"இந்தக் கூட்டத்தார் ஒரு தொழிலும் செய்யாத சோம்பேறிகளாகவும், ஜன சமூகத்தின் பொருளாதாரத்திற்கொரு சிறிதும் பிரயோஜனமற்றவர்களாகவும் இருப்பதோடு மாந்தரின் முன்னேற்றத்தைத் தடுத்து அவர்களுடைய மனோகாயங்களுக்கு விலங்கிட்டு விட்டார்கள்" என்றும்

கடவுளைப்பற்றிக் கூறும்பொழுது "கடவுள் ஒருவர் உண்டு என்று ருஜு செய்யப் போதிய சான்றுகள் இல்லாத காரணத்தால் மட்டுமே கடவுள் இல்லை யென்று எந்தப் பகுத்தறிவு வாதியும் சொல்லுவதாக நாம் நினைக்க வில்லை.

மேலும் கடவுள் என்ற வார்த்தைக்கு அனேகமான மதப்பிரிவுகள் இருப்பது போலவே பல அர்த்தங்களும் இருக்கின்றன. ஆனால் உலக நடவடிக்கைகள் சகலத்தையும் நடத்திக்கொண்டும் வணக்கத்திற்கும், பிரார்த்தனைகளுக்கும் பிரதி பயன் அளித்துக்கொண்டும் இருக்கும்படியான ஒரு கடவுளை நம்பவில்லையென்று சொல்லுவது நாஸ்திகமானால் அந்த நாஸ்திகப் பட்டத்தை ஏற்றுக்கொள்ள எந்தப்பகுத்தறிவு வாதியும் வெட்கப்பட மாட்டான்.

அன்றியும் அப்படிப்பட்ட கடவுளை நம்பாதவன் மனித சமூகத்தின் நன்மைக்கும், சுகத்திற்கும், மகிழ்ச்சிக்கும் உழைத்து தனது உழைப்புக்கு வேறு உலகில் எவ்வித பிரதி உபகாரம் பெறலாம் என்கிற எண்ணமில்லாமல் இருப்பதனால் அவன் ஒரு வைதீக-கடவுள் நம்பிக்கை உடையவனை விட பல மடங்கு மேலானவனே யாகும்'' என்றும் கூறியுள்ளார். இவ்வாறு பரந்த மனமும், விசால அறிவும், உயர்தர ஆங்கிலப் பட்டமும், விஞ்ஞானப்புலமையும் மிக்க அறிஞர் பராஞ்சிபை M. A. D. Sc. அவர்களைப்பற்றி நமது தென்னிந்திய பகுத்தறிவாளர்களுக்கு அதிகம் தெரியாது. விரைவில் இத்தகைய அறிஞரை தென்னிந்தியாவிற்கு அழைத்து அவரது இனிய சொற்பொழிவைச் செவி மடுத்துக் களிப்புறும் பேற்றை அடைவார்களென்று பெரிதும் விரும்புகிறோம்.

---

ஒரு மனிதன் தன்னைச் சுற்றிலுமுள்ள பழக்க வழக்கங்கள் மோசமானவை என்று தெரிந்தும் அவைகளின் ராட்சசப் பிடியினின்று விடுபட அசக்தனாயிருக்கிறான். கால தேச வேறுபாட்டின் நெருக்கடியினால் அவன் ஒரு நயவஞ்சகன் ஆவதோடு, தன் சுய அறிவு எதை முற்றிலும் வெறுக்கிறதோ அதையே பகிரங்கத்தில் புகழ்கிறான். ''ட்ரேப்பர்''

அனேக விஷயங்களில் சுயமான அனுபவமே சிறந்த பிரமாணமாயிருக்கையில் பழய சாஸ்திரங்களைத் தேடவேண்டியதில்லை. கைவல்ய சுவாமிகள்.

# விஞ்ஞான நினைவுகள்.

[பச்சையப்பன்]

## விஞ்ஞான விநோதங்களும் மூட நம்பிக்கையும்.

விஞ்ஞானம் அக்காலத்தில் எப்படித் தழைக்கத் தொடங்கிற்று என்றும், அதற்கு மதத்தின் பேராலும், பாமர மக்களின் பேராலும் இழைக்கப்பட்ட இன்னல்கள் எப்படிப்பட்டவை என்றும் இங்கு சுருக்கமாகக் கூறப்படுகின்றன. இவை இக்காலத்தில் ஹாஸ்யமாக இருக்குமெனினும், அப்போது எவ்வளவு தீங்குள்ளனவாய் நின்றன என்பதை நோக்குமிடத்து நமக்கு முன் பல பயங்கரமான காட்சிகளே காணப்படும்.

1. ஆர்க்கிமிடீஸ், என்ற கிரேக்க நிபுணர் கண்ணாடிகளின் (Lenses) உபயோகங்களைக் கண்டுபிடித்தார். அதன் பயனாய் வெகு தூரத்திலிருந்த எதிரிகளின் கப்பல்களை எரித்தார். ஆனால் இவரை ஒரு பெரிய மந்திரவாதி என்றெண்ணி கடுந்தண்டனைக்குள்ளாக்கினர்.

2. பேகன்ரிஷி, ஒரு பெரிய ஆராய்ச்சிக்காரர். பல புத்தகங்கள் எழுதியிருந்தார். அவைகள் பொன்னைப்பற்றியும், பூமியைப் பற்றியும் கண்ணாடிகளைப்பற்றியுமாய் இருந்தன. அவர் சேர்ந்திருந்த மதத்தின் தலைவன் அவரை ஒரு செப்பிடு வித்தைக்காரன் என்று சொல்லிச் சிறையில் வைத்தான். அவரது நூற்குழுமத்தையும் கொளுத்தினான்.

3. கோபர் நிகஸ், (Coper nicus) சூரியன் பூமியைச் சுற்றவில்லை. பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்னும் பொருள் கொண்ட நுணுக்கமொன்றை (Theory) வெளியிட்டார். அது விவிலியத்திற்கு விரோதமென்று கருதப்பட்டு மதத்தலைவரால் பறிமுதல் செய்யப்பட்டு கொளுத்தப்பட்டது.

4. காலிலேயோ கலிலீ, என்னும் விஞ்ஞானி கோபர் நிக்கஸ் தியரியை (அபிப்பிராயத்தை) ஆதரித்து ஒரு புத்தகம்

வெளியிட்டார். அதற்கு மதத் தலைவரின் (Pope) உத்திரவும் பெற்றிருந்தார். ஆயினும் அந்தத் தலைவரே அவற்றைப் பறிமுதல் செய்ததுமன்றி, கலிலீயோவைத் தன் முன் ஆஜராகும்படியும் கட்டளையிட்டார். கலிலியோ தன் குற்றத்திற்கு மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டார். (இன்றேல் கடுந் தண்டனைக்கு உள்ளாகவேண்டியிருந்திருக்கும்.) போப் கலிலியோவை "சூரியன்தான் பூமியைச் சுற்றுகிறது" என்று சொல்லச் சொன்னார். அப்படியே மண்டியிட்டவண்ணம் கூறினார். ஆனால் எழுந்திருக்கும்போது "பூமிதான் சுழல்கிறது" (E. Pur si muove) என்று முணுமுணுத்துக்கொண்டாராம். பிறகு அவர் வீட்டிலேயே இருந்து சிறைவாசம் புரியும்படி உத்திரவு கிடைத்தது. 1642-ல் அவர் இறந்தார். அவர் தன்னை பிளாரன்ஸிலுள்ள ஸாண்டா கிராஸா சர்ச்சிலேயே அடக்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார். ஆகவே அவரது பிரேதத்தை அங்கேயே புதைக்கவும், அவருக்குச்சிறந்த சின்னமொன்று ஏற்படுத்தவும் மூவாயிரம் பொன் செலவு செய்ய நகரத்தார் தீர்மானித்தனர். ஆனாலும் அது மதத்தலைவர்களால் தடுக்கப்பட்டது. "மத விரோதி. அவனைக் கவுரவித்தால் பூமி சுற்றுகிறது என்னும் அவனது கற்பனையை ஒப்புக்கொண்டதாகும்" என்பது அவர்களது கூற்று! ஆனால் நூறு வருஷங்களுக்குப் பின் இதாலி ஜனங்கள் (பல அறிஞர்கள் உள்பட) அவரது எலும்பை எடுத்துச் சிறப்பாக அடக்கம் செய்தனர். உண்மை இன்றில்லாவிடினும் பிறகாவது சிறப்பிக்கப்படுமன்றோ!

5. அக்காலத்தில் இங்கிலாந்தில் முதன் முதல் அச்சுத் தொழிலைப் புகுத்தியவர் காக்ஸ்டன் என்பர் ஆவர். அச்சுப் புத்தகங்கள் சைத்தானால் கொடுக்கப்பட்டவை; நாம் படித்தோமானால் கெட்டுப்போவோம் என்று பாமரர்கள் கருதினார்கள். அச்சு யந்திரங்களை உடைத்தெறியவும் தயாராய் இருந்தனர். ஆனால் அரசரும், மதத்தலைவர்களும் துணை நின்றனராகையால் பலிக்கவில்லை. இருப்பினும் பல வருஷங்கள் வரையில் அச்சுத்தொழில் கோவிலுக்குள்ளேயே நடைபெற்றது. (இந்த ஜனங்களிடமிருந்து தப்ப) விவிலியம் விரைவில் பரப்பவேண்டும் என்ற விருப்பத்தினால் போலும் மதத்தலைவர்கள் வாளாவிருந்தனர்!

6. ரிச்சர்ட் ஆர்க்ரைட், என்பவர் முதன் முதலில் ஓர் அம்பட்டர். பிறகு நெசவுத் தொழிலிலே ஈடுபட்டு யந்திரங்

கன் கண்டுபிடித்தார். அதே சமயத்தில் ஹார்கிரீவ்ஸ் என்பாரும் நெசவுச் சக்கரம் ஒன்று கண்டுபிடித்தார். இது பொது ஜனங்களால் உடைத்தெறியப்பட்டது. ஆர்க்ரைட் தனது பேட்டண்டை ஸ்திரப்படுத்த முயன்றார். முதலாளிகள் இதை வெறுத்தனர். கோர்ட்டில் வழக்கும் தொடர்ந்தனர். அதன்படி ஆர்க் தனது பேட்டண்டை இழந்தார். பிறகு பல வருஷங்களுக்குப் பின் யந்திர சாதனம் பல கண்டுபிடித்து வெற்றி பெற்றார். காந்தியின் சகாக்கள் அங்கும் அக்காலத்தில் இருந்தனர் போலும்!

7. ஜார்ஜ் ஸ்டீபன்ஸன் என்பார் தனது ஆராய்ச்சியின் பயனாய் கண்ட இயந்திரத்தை லிவர் பூலுக்கும் மாஞ்சஸ்டருக்கும் இடையே விட ரெயில்பாதையொன்று போட்டார். வண்டியும் விடப்பட்டது. ஆனால் இந்த யோசனைக்குப் பலமான எதிர்ப்பு இருந்து வந்தது. பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் ஸ்டீபன்ஸனைக் கண்டித்தன. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இக்கூற்று. பாதிரிகள் பலர், "ஜனங்களைக் கொல்ல இது ஒரு சூழ்ச்சி" யென்றனர். ஆனால் அது இப்போது ஓடும் தொடர் வண்டிகளுக்கு வழிகாட்டியாய் நின்றது.

8. சார்லஸ் டார்வின் பெரியார் தனது அமெரிக்கப் பிரயாணத்தின் பயனாக பல உண்மைகளைக்கண்டார். ஜீவ உற்பவம் (Origin of species) என்ற புத்தகத்தை வெளியிட்டார். அதற்குப் பல நண்பர்கள் உதவி இருந்தது போலவே எதிரிகளும் எண்ணற்றவராயினர். இங்கிலாந்தில் மட்டுமே யன்றி ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுங்கூட பலமான எதிர்ப்பிருந்தது ஆனால் அது டார்வின் அவர்களுக்கு பெருத்த விளம்பரம் தந்தது. அதன் பயனாய் பலர் அப்புத்தகத்தைப்படித்துப் பயன் பெற்றனர்!

9. டாக்டர் ஸிம்ஸன் மயக்கங்கொடுக்கும் மருந்து (Chloroform) கண்டுபிடித்தார். அது வேதனையில்லாமல் சத்திர சிகிச்சை முதலானவைகள் செய்ய மிகவும் உபயோகமாய் இருந்தது. அதை எதிர்த்தவர்கள் பலர். அவரிடம் வைத்தியம் செய்துகொள்ளவும் அல்லது அந்த மருந்தை உபயோகம் செய்யவும் பலர் அஞ்சினர். "மயக்கமருந்து கடவுளின் சம்மதமில்லாதது. கடவுள் வேதனையை மனிதனுக்கு விருப்பத்துடனே தான் கொடுத்திருக்கிறார். அதைத்தடுக்க

மனிதனுக்கு உரிமையில்லை'' என்றனர். சிலர் விவிலியத்தினின்றே மயக்கம் கொடுப்பது தவறல்ல என்று காட்டினார்கள்! பிறகு அம்மருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சீர் திருத்தம் செய்யப்பெற்று இன்று எல்லோராலும் உபயோகிக்கப் படுகின்றது. ''பழகிய பின் வழக்கமும் உண்டாகின்றது; மதமும் இடம் கொடுக்கிறது'' என்பது ஒரு பழமொழி.

10. தாமஸ் ஆல்வா எடிஸன் கண்டுபிடித்த கிராமபோன் பிரக்யாதி பெற்றது. மதத்தலைவர் ஒருவருக்கு இது பிடிக்கவில்லை. பெட்டிக்குள் ஒரு சைத்தான் பேசுகிறது என்று சொன்னாராம். எடிசன் தனது சிரிப்பை அடக்கிக்கொண்டு பொறுமையுடன் ''சைத்தான் வேதம் ஓதுமா?'' என்று கேட்டாராம். ஓதாது என்றார் அந்த மதத்தலைவர். ''அப்படியாயின் தாங்கள் வேத பாஷையிலிருந்து சில எடுத்துச்சொல்லுங்கள்'' என்று சொல்லி அவைகளை அப்படியே கிராமபோனில் அமைத்து இயங்கச்செய்தார் பிறகுதான் ''அம்மகான்'' எடிசனின் அபார சக்தியைப் புகழ்ந்தாராம்!

சமீபத்தில் நான் ஆரப் அரசரின் கதையொன்றைப் படிக்க நேர்ந்தது அது வருமாறு:—அரசர் ஒருநாள் ஒரு பொதுவிடத்தில் இருந்துகொண்டு தமது காரியாலயத்திலிருப்பவருடன் பேசினாராம். அதற்குப்பதில் வந்தது. இதைக்கண்ட அங்கிருந்த பக்கிரி ஒருவன், ''அதற்குள் சைத்தான் பேசுகிறது.'' என்றானாம். ''குர்-ஆன் சைத்தான் ஓதாது அல்லவா. நீ என் காரியாலயத்தில் இரு. நான் குர்-ஆன் படிக்கிறேன் கேள் என்றார். அப்படியே சென்று கேட்டபின் இது விசித்திர உலகம் என்று ஆச்சரியத்துடன் சென்றானாம்

---

கிருஸ்து எதைச்சொன்னதற்காக கொல்லப்பட்டாரோ அது இன்று வேதமாய், வணக்கத்திற்குரியதாய் விளங்குகிறது.

ஆதலால் இன்று வெறுக்கப்படுவதெல்லாம் கெட்டது என்று சொல்லிவிட முடியாது. ஈ. வெ. ரா.

# பர்னாட்ஷா கருத்து.

## மனைவியர்.

மனைவிமார்கள், வாழ்வில் ஓர் முக்கியமான வேலையைச் செய்து முடிக்கின்றனர். ஆண்களைப் பெண் மக்கள், சுத்தமுள்ளவர்களாகவும், நல்ல தோற்றமுடையவர்களாகவும் மாற்றிவிடுகின்றனர்.

ஓயாமல் அடிக்கடி ஒருவனைக் கவனித்துக் கொண்டிருக்கும் ஒரு பெண் இல்லையானால் அந்த மனிதன் எவ்வளவு அவலட்சணத் தோற்றமுடையவனாக அலைவான் என்பதைப் பெண்களே அறிவார்கள்.

சாதாரண மனிதனுடைய வெற்றிகள் எல்லாம், அவனை உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கும். பெண்ணைப் பொறுத்ததாகவே இருக்கும்.

## குழந்தைகள்.

ஒரு நாள் ஒரு கல்வியபிமானி, என்னிடம் சில சிறந்த கருத்துக்களைத் தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்குச் "சிறுவர்கள் சந்தோஷமானவர்களாகவும், இலேசானவர்களாகவும் காணப்படுவதற்குக் காரணம், அவர்கள் (ஆசிரியர்கள்) வேலைக்கும், விளையாட்டுக்கும் உள்ள வித்தியாசத்தை அறியாமலிருப்பதனால்தான்" என்று கூறினார்.

இது ஒரு நுணுக்கமான விஷயம், மனித வாழ்க்கையானது வெறும் விளையாட்டு மயமானதல்ல. ஆகையால் இக் கருத்தோடு கல்வி போதிக்கப்படுமானால், அதுகுறை கூறுவதற்கு இடமானதேயாகும்.

ஒவ்வொரு மாணவனும் தினந்தோறும் அரை மணி நேரமாவது வேலை செய்யும்படி ஏவப்படவேண்டும் என்று நினைக்கின்றேன். மாணவர்கள் உழைக்கப் பழகவேண்டுமேயல்லாமல் விளையாடப் பழகக் கூடாது.

## இளமையும், முதுமையும்.

ஒரு மனிதனுடைய வாழ்வில் துன்பகரமான பாகம் 40 வயதும், அதனைக் கொஞ்சம் அடுத்து வரும் வயதுமாகும். எனக்கு 40-வயது வந்தபோது மிகவும் கஷ்டப்பட்டேன் என்று நினைக்கிறேன். அந்தக் காலத்தில் பெரும்பாலான வர்கள் கவலைப்படுகின்றார்களென்றே நினைக்கிறேன்.

40 வயதானதும் இனி இளமைப் பருவம் இல்லையென்ற நினைப்பு வந்துவிடுகின்றது. ஆனால் மனிதன் அடைய வேண்டிய அறிவைப் பொறுத்தவரையில் 40-வயது ஒரு குழந் தைப் பருவமேயாகும்.

பிறகு 50-வயதுக்கும், 60-வயதுக்கும் இடையில் உடம் பின் ஆரோக்கிய நிலைக்குத் துன்பம் உண்டாகும். அப் போது அடிக்கடி உடம்பில் கோளாறு உண்டாகும். எந்த மாற்றத்திற்கும் உடம்பு துவண்டு குழப்பமடையும். பெரும் பாலும் மரணத்தின் கையில் அகப்பட்டுக்கொண்டது போலத் தோன்றும்.

60-வயதுக்கு அப்புறம் ஒரு ஆச்சரியமான ஊக்கம் உண் டாகின்றது. எங்கிருந்தோ ஒரு புதுப்பிறப்பு எடுத்து விட் டதுபோல் தோன்றும். உடம்பில் நோய் இராது; மனதில் கவலையும் இராது; எந்த விஷயத்திலும் ஒரு துணிச்சல் உண் டாகும். எந்த விஷயமும் தன்னைத்தடை செய்வதாக உணர மாட்டார்கள்.

நான் 90-ஆம் வயதில் பயம், கவலை ஆகியவற்றின் அடையாளங்கள் தலைகாட்டுவதைப் பார்க்கிறேன். ஆனால் எதிலும் முதன்மையாக நிற்பதுபோல் காட்டிக்கொள்ளுகி றேன். நடக்கும்போது கம்பு போல் இருப்பதாகப் பாவனை செய்கிறேன்; என்றாலும் நான் முதுமையை அடைந்து விட் டேன் என்ற எண்ணம் இல்லாமல் இல்லை,

கடுமையாக வேலை செய்யும் எந்த மனிதனும் 38-வது வயதை அடையும்போது 15-மாதம் படுக்கையைச் சரணாகதி யடைய வேண்டுமென்று நினைக்கிறேன். சரித்திரத்தை நோக் கினால் 40-வயது தொடங்கும்போதும் 30-வயது கடந்த பின் னரும் தான் பலர் இறந்துபோயிருக்கிறார்கள் என்பதைக் காணலாம்.

# எல்லாம் சுயமரியாதையால் தான்.

அர்ச்சகர், ஜோசியர் சம்பாஷணை.

சித்திர புத்திரன்.

---

காலம், மாலை நேரம்.

இடம்:— தெப்பக்குளத்து ஓரம் கல்லுக்கட்டு மண்டபம்.

பாத்திரங்கள்:— அர்ச்சகருக்கும், ஜோசியருக்கும் சம்பாஷணை.

விஷயம்:— "பிழைப்புக்கு ஆபத்து வந்துவிட்டதே-எல்லாம் இந்த சுயமரியாதையால் தான்" என்பது.

ஜோ-ர்:— ஆ! ஆ! வாருங்கள், வாருங்கள்! அர்ச்சகர்வாள்! ஏளனும்! ஏளனும்!! எங்கே உமை ரொம்ப காலமாக சந்திக்கவே முடியவில்லை? கோவில்களில் ரொம்ப ஜோலியாக்கும்.

அ-ர்:— நாசமாய்ப் போச்சுது, கோவிலாவது ஜோலியாவது, சுடுகாடாவது,

ஜோ-ர்:— ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? என்ன? கோவிலில் வேலை இல்லை என்கிறீர்களா?

அ-ர்:— எங்கே ஜோசியர்வாள்! முன்போல ஆளுகள் கோவிலுக்கு வருகிறார்களா? பகுதிப்பேராவது வருகிறார்களா? குடும்பம் பெருத்துவிட்டது; வரும்படி சுத்தமாய் பூஜ்யமாய்விட்டது. வேளா வேளைக்குத் திறக்கவும் பூட்டவும் தான் வேலை இருக்கிறதே ஒழிய யாத்திரை வாசிகளோ, உள்ளூர்க் காரர்களோ யாரும் வருவதில்லை.

ஜோ-ர்;— என்ன காரணம்?

அ-ர்:— எல்லாம் இந்த எழவெடுத்த சுயமரியாதை தான் காரணம்.

ஜோ:- அப்படியென்றால் என்ன? சுயமரியாதைக்காரர்கள் சாமி இல்லை, பூதமில்லை, பேய் இல்லை கோவிலுக்கும் போவதில் பயனில்லை என்று ஊர் ஊராய் பிரசாரம் செய்கின்றார்களே அதனாலா?

அர்:- இல்லை, இல்லை அதனாலெல்லாம் நாம் பயப்பட வேண்டியதில்லை. அவர்கள் இன்னமும் ஆயிரந்தடவை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளட்டும், சாமியையே புரட்டிக் கீழேவேண்டுமானாலும் தள்ளட்டும், கோயிலைக்கூட இடிக்கவேண்டுமென்று சொல்லட்டும் இதனால் எல்லாம் நமக்கு ஒன்றும் முழுகிப்போய் விடாது.

ஜோ-ர்:— பின்னை ஏன் சுயமரியாதைக்காரர்கள் மீது குற்றம் சொல்கிறீர்கள்?

அ-ர்:— கோவிலுக்கு வழக்கமாக வரும் தேவடியாள்களை நிறுத்திவிட்டார்களல்லவா? அவர்களது கைங்கரியத்தைப்பற்றி கண்டபடி பேசி அதற்கொரு சட்டமும் செய்யச் செய்து விட்டார்கள். அதுமாத்திரமல்லாமல் கோவில் கைங்கரியத்துக்குத் தாசிகள் இல்லாமல் செய்ததோடு, தாசித்தொழிலைக்கூட செய்யக்கூடாது என்று சட்டம் செய்து இனப்படி கோவிலுக்கு வந்துகொண்டிருந்த விபசாரிகளையும் ஊரை விட்டு விரட்டி அடித்து விட்டார்கள். இந்த இரண்டு கூட்டமும் கோவிலுக்கு வரவில்லையானால் அப்புறம் எந்தக் கழுதை கோவிலுக்கு வரும்? தாங்கள்தான் சொல்லுங்களேன்?

ஜோ:- என்ன அர்ச்சகர்வாள்! தாசிகளும், விபச்சாரிகளும் கோவிலுக்கு வருவதற்கும் பக்தர்கள் யாத்திரைக் காரர்கள் கோவிலுக்கு வருவதற்கும் என்ன சம்பந்தம்? அவர்கள் வராவிட்டால் இவர்கள் ஏன் வரக்கூடாது?

அர்:- ஜோசியர்வாள்! தாங்கள் என்ன ஒன்றும் தெரியாதவர்கள் போல் பேசுகிறீர்கள்! நம்முடைய பெரியவாள் எல்லாம் என்ன முட்டாள்கள் என்று நினைக்கிறீர்களா? ஒவ்வொரு முக்கியமான கோவில்களையும், ஸ்தலங்களையும் பாருங்கள்! கோவில் கட்டும்போதே அர்ச்சகர்களுக்கும், தாசிகளுக்கும் வீடுகள், மான்யங்கள் எல்லாம் ஏற்பாடு செய்திருப்பதுடன் அர்ச்சகர் ஒருவர் இருவர் என்றால் தாசிகள் 8 பேர் 10 பேர் வீதம் நியமனம் செய்திருக்கிறார்களே. ஏன் தங்களுக்குத் தெரியாதா?

ஜனங்களைக் கோவிலுக்கு வரும்படியாகத் தூண்டவும் கோவில் பைத்தியம் உண்டாகவும்தானே தாசிகளை கோவில் களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

கோவிலுக்கு வருகின்றவர்கள் எல்லாம் பக்திக்காகவா வருகின்றார்கள் ?

ஜோ:- அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? பக்தி இல்லாமல் கோவிலில் வேலை என்ன ?

அர்:- பக்தி கோவிலுக்கு வந்துதான் காட்டவேண்டும்!

முதலில் தாசியைப்பார்க்க என்று 4-பயல்கள் ஜோராய் பக்தி வேஷம் போட்டுக்கொண்டு கோவிலுக்கு வருவார்கள். பிறகு இந்த ஷோக் ஆசாமிகளைப்பார்க்க என்று நான்கு குடு ம்ப ஸ்திரீகள் என்பவர்கள் அலங்கரித்து ஷோக் நடை நடந்து கொண்டு கோவிலுக்கு வருவார்கள். அப்புறம் இவர்களைப் பார்க்க என்று பல பேர்வழிகள் வருவார்கள். இப்படியே ஒன்றுக்கு ஆக ஒன்று என்றும் ஒன்றை ஒன்று ஆதரிக்கும் கூட்டம் சரியாய் இருக்கும். இதன் பயனாய் நமக்கும் வேலை இரண்டுவிதத்திலும் சரியாய் இருக்கும். வரும்படிக்கும் குறைவு இருக்காது நமக்கும் தாசி, நம்ம பையனுக்கும் தாசி வீட்டிலுள்ளவர்களுக்கும் அப்படி, இப்படி.......... அப்பு றம் சொல்லவேண்டுமா?

ஜோ-ர்:— இதனாலா இப்போது கோவிலுக்கு ஆள்கள் வருவதில்லை என்கிறீர்? எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. அது சரி, இரண்டுவிதத்தில் வரும்படிஎன்றீர்களே மற்றொரு விதம் என்ன?

அ-ர்:- அதுவா? தங்களிடம் சொல்வதற்கு என்ன வெட் கம்! "தாசியை ஒளித்த சூலா"

தாசிகளைப்பார்க்க ஆண்கள் வருவார்கள் என்று சொன் னேன். ஆண்களைப்பார்க்க மற்ற குடும்பப் பெண்களிலும் சிலர் வருவார்கள் என்று சொன்னேன். இவர்கள் எல்லாம் பூஜை அர்ச்சனை என்கின்ற வகைகளில் காணிக்கை, கட்டளைப் பணம் ஆகியவைகளுக்கு கொடுப்பதில் லாபம் ஒன்று, மற் றொன்று இவர்களைச் சேர்த்து வைத்ததில் இணைப்புத்தரகு என்கின்ற வகையில் ஏராளமாய்க்கிடைக்கும். பிரபுக்களும்

பிரபுக்கள் வீட்டுச்சில பெண்களும் இதற்குத்தான் ஏராளமாய்க்கொடுப்பார்கள். அநேக விஷயங்களில் அவர்கள் வீடு நம்ம வீடு என்கின்ற வித்தியாசமே கிடையாது. இதனால் தான் வீடு வாசல் எல்லாம் கட்டமுடிந்தது. தாராளமாய்ப் பிழைக்கவும் முடிந்தது. மற்றபடி கோவில் சம்பளமாகிய மீ 1—12—0 ரூ சம்பளத்தாலா நம்ம குடும்ப மக்கள் வாழமுடிகின்றது?

ஜோ-ர்:- அப்படியா சங்கதி? சுயமரியாதைக்காரன்கள் இதில் எல்லாமா மண்ணைப்போட்டு விட்டான்கள்? அப்படியானால் நாம் வேறு வழியில் கோவில்களுக்குப்பழய நிலைமை உண்டாக்கி விடமுடியாதா?

அ-ர்:- என்ன செய்வது? தாங்களாவது ஒரு வழி சொல்லுங்களேன்.

ஜோ-ர்:- அர்ச்சகர்கள் எல்லோரும் ஒன்று சேருவது. ஒரு மகாநாடு கூட்டுவது. எல்லோரும் உண்மையான சம்சாரம் என்பதற்கு ஆக ஒவ்வொரு பெண்களைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள் அல்லவா? அது தவிர இந்த கோவில் கைங்கரியத்துக்கு என்பதாக மறுபடியும் ஆளுக்கு ஒன்று இரண்டு கல்யாணம் பொய்க்கல்யாணம் செய்து கொள்ளுவது. வெளியாருக்கு மாத்திரம் கல்யாணம் என்று தெரியட்டும். நாம் செய்யும் போதே இந்தக் காரியத்துக்கு என்று செய்து கொள்ளுவது. பிறகு சவுகரியப்படி செய்து கொள்ளுவது. நம்ம சொந்த சங்கதியை வேண்டுமானால் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுவது. இப்படியெல்லாம் செய்தால் தான் சுயமரியாதையை வெல்ல முடியும்.

அ-ர்:— யோசனை நல்ல யோசனைதான். காரியத்தில் அது சாத்தியமாக வேண்டாமா? ஒருவன் இரண்டு மூன்று பெண்களைக் கட்டுவதென்றால் அதற்குச்செலவு, நகை, துணி மணி, அதற்கேற்ற வீடு வாசல், தட்டு முட்டு இவையெல்லாம் லேசான காரியமா? பணத்திற்கு எங்குபோவது?

ஜோ:- என்னமோ கஷ்டகாலம்தான்; இது அர்ச்சகர்களை மாத்திரமா பிடித்திருக்கிறது? தாங்கள் சொல்லுவதைச் சொல்லட்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தேன். நம்ம சங்கதியும் அப்படித்தான் இருக்கிறது.

அர்:- தங்களுக்கு என்ன சுவாமிகளே குறைவு! கோவில்களுக்குத்தான் தாசிகள் விபச்சாரிகள் இல்லாததால் கெட்டுவிட்டது. ஜோசியம், வாழ்க்கைச் சடங்குகள், கல்யாணபொருத்தம், புரோகிதம் ஆகியவைகளுக்குக் கெடுதிவர ஒரு காரியமும் ஏற்பட்டுவிடவில்லையே?

ஜோ:- அந்தக் கொடுமையை ஏன் கேட்கிறீர்கள்? இந்த சுயமரியாதைக்காரப் பயல்களால் ஜோசியம் கேட்பது என்பதே கேலியாய்ப் போய்விட்டது. ஒருவன் இருவனுக்கு நாம் வலியப்போய்ச்சொல்வதாயிருந்தாலும், இரகசியமாய் இருட்டு வீட்டில் உட்கார்ந்து கொண்டு கேட்கிறான் கொடுக்கிறதோ பூஜ்ஜியமாய்விட்டது. அவன் கொடுத்தாலும் சரி கொடுக்காவிட்டாலும் சரி அந்தப் பிழைப்புக்கு அடியோடு ஆபத்து வரக்கூடாதே என்று ஏதோ வேஷம் போட்டுக்கொண்டு திரிகிறேன். வீதியில் நடந்தால் சுயமரியாதை வெடி குட்டிகள், கொள்ளையில் போனதுகள் நம்மைப் பார்த்து பரிகாசம் பண்ணுகின்றதுகள்.

ஒரு நாள் ஒரு தகப்பன் அவன் தகப்பனுக்கு திதி கொடுத்தான். நான் எல்லாவற்றையும் மூட்டை கட்டிக்கொண்டேன். அவன் மகன் 7-வயதுப் பையன்; நன்றாய்ப் பேசக்கூட தெரியவில்லை. ஒரு காகிதத்தில் என்னமோ எழுதிப் படித்து என்னிடம் கொண்டுவந்து மூட்டையைக் கையால் பிடித்துக் கொண்டு இந்த சாமான்களை எங்கள் தாத்தாவுக்குத்தானே கொண்டுபோகிறீர்கள்? இந்தக் காகிதத்தை முதலில் எங்கள் தாத்தாவிடம் நான் கொடுத்ததாகச் சொல்லிக் கொடுத்து பதில் வாங்கிக்கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் பிறகு இந்த மூட்டையையும், இன்னும் அவருக்கு என்னென்ன வேண்டுமோ அந்த சாமான்கள்களையும் வாங்கிக்கொண்டு போங்கள் என்று பிடிவாதம் பேசி ஏளனம் செய்தான். எல்லோரும் சிரித்தார்கள். இனி இந்தப் பிழைப்பு பிழைப்பதைவிட எச்சில் இலை பொறுக்கிச் சாப்பிடலாம், என்று கூடத் தோன்றிவிட்டது. கழுதைக்கும் மனிதனுக்கும் பொருத்தம் கேட்கிறார்கள். ஆணுக்கும் ஆணுக்கும் பொருத்தம் கேட்கின்றார்கள். செத்துப்போனவர்களுக்கும், இருக்கிறவர்களுக்கும் பொருத்தம் கேட்கிறார்கள். தாய்க்கும், மனுக்கும் பொருத்தம் கேட்கிறார்கள். எல்லாம் சரியான ஜாதகங்களை அதாவது பிறந்த கால நேரங்களைக் கொடுத்தே பொருத்தம் கேட்கிறார்கள். இதையெல்லாம் நாம் எப்படிக் கண்டுபிடித்துக்கொள்ளமுடியும்? பொருத்தம் இருக்கிறது என்று சொன்

னால் சிரிக்கிறார்கள். தலையைத் தட்டுகிறார்கள். ஜோசிய விஷயமோ செத்துப்போனவர்கள் ஜாதகத்துக்கு ஆயுள் எவ்வளவு என்று கேட்கிறார்கள். அப்பப்பா! இந்தச் சுயமரியாதைப் பையன்களிடம் சிக்கிக்கொண்டு வெகு தொல்லையாய் இருக்கிறது. என்ன செய்வது?

அ-ர்:— ஏன் பொருத்தங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் கூட பார்ப்பதில்லையா?

ஜோ-ர்:— ஜோசியம் பொருத்தம் இவைகளில் நம்பிக்கை உள்ள வீடுகளில் பெரியவர்கள் பொருத்தம் கிருத்தம் பார்க்கிறார்களா என்றால் அந்தந்த வீட்டுப்பெண்ணும் மாப்பிள்ளையுமே பார்த்துக்கொள்ளுகின்றனர். தகப்பனார் தாயாருக்குக் கூட அந்த வேலை இல்லாமல் போய்விட்டது. அப்புறம் நம்மை யார் பொருத்தம் கேட்பார்கள்?

அ-ர்:- இதுகள் தான் இந்தக் கதியானால் கிரகதோஷம், சாந்தி முதலிய வைகளில் உள்ள கிறாக்கிகள் தங்களுக்கு இருக்குமே.

ஜோ-ர்:— அது நாசமாய்ப் போய் வெகுகாலமாச்சுது. காயலா, தலைவலி, கால் வலி என்றால் வருவதற்கு முன்னமேயே டாக்டர்களிடம் ஓடுகின்றார்களே ஒழிய நம்மிடம் எவன் வந்து கிரகதோஷம் பார்க்கிறான்? எவன் சாந்திசெய்யச்சொல்லுகிறான்?

நான் ஒரு பெரியவர் காயலாவுக்குப் போய் பார்த்து கிரகதோஷம் சொல்லி சாந்திசெய்ய லிஸ்ட்டு போட்டுக் கொடுத்துவிட்டு உட்கார்ந்திருந்தேன். காயலாக்காரர் வைத்தியமும் பார்த்தால் தேவலாம் என்று நினைத்து வழக்கம்போல் டாக்டருக்குச் சொல்லி அனுப்பினார். டாக்டரும் வந்துவிட்டார். அவர் பேரன் ஒரு 12-வயது பய்யன் வாசல்படியில் நின்றுகொண்டு "டாக்டருக்கு இந்த வீட்டில் வேலை இல்லை; காயலாவுக்குக் காரணம் கிரக தோஷம் என்று இதோ இந்த சாஸ்திரியால் கண்டுபிடிக்கப்பட்டு அதற்காகச் சாந்தி செய்ய லிஸ்ட்டு போட்டாய் விட்டது. ஆதலால் அனாவசியமாக இரட்டைச்செலவு வேண்டாம். ஒன்று ஜோசியரை நம்ப வேண்டும், இல்லா விட்டால் டாக்டரை நம்பவேண்டும் இந்த இரண்டுங்கெட்ட புத்தி கூடாது" என்று சொல்லி, கடைசியாக ஜோசியர் வெளியில் போனால் தான் டாக்டரை உள்ளே விடுவேன் என்று வழிமறித்து விட்டான்.

கடைசியாக சாந்திக்குப் போட்ட லிஸ்ட்டு கிழித்தெரியப் பட்ட பிறகு டாக்டர் உள்ளே வந்தார் நான் "ஆடு திருடின குறவன்போல் பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு மரியாதையாய் வெளியேறி விட்டேன். இப்படி இருக்கிறது என் பிழைப்பு; என்ன செய்வது?

அ-ர்:- எப்படியாவது சுயமரியாதைக்காரன்களை ஒழித்தாக வேண்டும். இல்லாவிட்டால் உங்களுக்கும் நமக்கும் மாத்திரமல்ல நம்ம சமூகத்தின் சுகவாழ்வுக்கே ஆபத்து வந்துவிடும். ஆகவே இதற்கு ஒருவழி சொல்லுங்கள்.

ஜோ-ர் என்னவழி I. C S. நம்மிடவாள், C. I. D. நம்மிடவாள், ஜட்ஜிகள் முனிசீபுகள், நம்மிடவாள், போலீசுகளில் நம்மிடவாள், மேஜிஸ்ட்ரேட் டிப்டி மேஜிஸ்ட்ரேட் சப் மேஜிஸ்ட்ரேட் நம்மிடவாள் வக்கில்கள் நம்மிடவாள் வெள்ளைக்காரர்களையும் ஏறக்குறைய நம்மிடவாளாகவே ஆக்கிக் கொண்டிருக்கிறோம்.

இந்தக் காலத்தில் இந்தச் சுயமரியாதை அழிக்கப்படவில்லையானால் இனி எப்போது அழிக்கப்படப்போகிறது?

ராவணன் இரணியன் காலத்தில் தப்பிக்கொண்டோம். புத்தர்காலத்தில் தப்பிக் கொண்டோம். மகமது காலத்தில் தப்பிக்கொண்டோம் இந்தக் காலம் தானே கொஞ்சம் தொல்லையாய் இருக்கிறது? உத்தியோகத்திலும் தொல்லைப்படுத்துவான்கள், வைதீகத்திலும் தொல்லைப் படுத்துவான்கள். இவன்களை எப்படித்தான் தொலைப்பது என்பது நமக்கு விளங்கவில்லை

அ-ர்:- இப்பொழுது ஆங்காங்கு சத்துரு சங்கார யாகம், வாஜ்பேய யாகம், முதலிய யாகங்கள் நடக்கின்றனவே அதுகள் மூலம் இவன்கள் ஒழிக்கப்படமாட்டார்களா!

ஜோ-ர்:- யாகமாவது மோகமாவது? அப்படி யாகத்தில் காரியங்கள் ஆகிவிடுமானால் ஐரோப்பா, அமெரிக்கா, ரஷ்யாக்காரன்கள் எல்லாம் இங்கு இருக்கும் பிராமணர்களை எல்லாம் விலை கொடுத்து வாங்கிக்கொண்டு போய் யாகம் செய்யச் செய்து ஒருவனை ஒருவன் ஜெயித்து விட மாட்டான்களா? துப்பாக்கி என்னத்துக்கு? பீரங்கி என்னத்துக்கு? ஆகாயக் கப்பல், வெடிகுண்டுகள், விஷப்புகை இவைகளெல்லாம் என்னத்திற்கு? யாகத்தில் சத்து இருந்தால் சயன்ஸ்காரன்கள் விட்டு விடுவான்களா? சும்மா முட்டாள் பயல்களை ஏமாற்ற

# மத ஆட்சி.

ஓ! அறிவு கெட்ட மனிதனே! இன்றைய மனிதசமூகத்தை ஆட்சி புரியும் மதங்களை யார் உற்பத்தி செய்தார்கள்?

மக்கள் மதத்துக்காக ஒரு மகாநாடு கூட்டி, மத உண்மைகளையும், அதன் நன்மை தீமைகளையும், அவற்றின் முன்பின் யோக்கியதைக்களையும், பலாபலன் களையும், அவசியத்தையும் பற்றி நன்றாகப்பேசி வாதப்பிரதிவாதங்கள் செய்து தீர்மான மூலமாக நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வந்தார்களா?

ஏதோ ஒருவன் தீர்மானித்து விட்டதை, செம்மறியாடுகள் ஒன்றின் பின் ஒன்று தலை குனிந்து செல்வதுபோல், தலைமுறை தலைமுறையாய்ப் பின் வார்சுகளுக்குக் குழந்தைப்பருவத்தில் பாலுடனும் நீருடனும் ஊட்டி வருவதன் மூலம் உயிர் வாழுபவைகள் தானே இன்று மதங்களாய் விளங்குகின்றன?

இதற்கு இத்தனை அதிகாரமா? ஆர்ப்பாட்டமா? செலவா? நேரக்கேடா? இவ்வளவும் தவிர அதற்கு கொடுங்கோல் ஏகச்சக்ராதிபத்திய ஆட்சி கூடவா?

என்ன அனியாயம்! மதத்தை ஏற்றுக்கொள்ளும் யாராவது, ஏற்றுக்கொள்ளு முன் இவைகளைப்பற்றி சிறிதாவது சிந்திக்கிறார்களா? குழந்தைப்பருவத்தில் பிடித்த மதச் சனியன் சுடுகாட்டில் கூட ஒழிவதில்லையே!

இவ்வளவு தானா? கடவுள்கள் சங்கதி இதைவிட மோசமாகவல்லவா இருக்கிறது? இதைப்பற்றிப் பின்னால் விசாரிப்போம்,

---

வும், அவன்களுக்கு மூட நம்பிக்கைளில் மோகம் வரவும் செய்யப்படுகின்ற ஒரு சூழ்ச்சிப் பிரசாரமே ஒழிய வேறென்ன? அதை நம்பினால் ஆபத்துதான். வேறு ஏதாவது செய்ய வேண்டும்.

யாரோ சுயமரியாதைக்காரன்கள் வருகிறான்கள் போல் இருக்கிறது. பின்னால் மற்றொரு சமயம் பேசிக்கொள்ளுவோம். மூக்கைப் பிடித்து ஜபம் பண்ணுகின்றவர்கள்போல் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்துகொள்வோம்.

அர்;- சரி அப்படியே செய்வோம்.

F—3.

# பெரிய குழந்தைகள் விளையாட்டு.

கனகராஜன்.

பெரிய குழந்தைகள் விளையாட்டு என்பதைப் பார்த்தவுடன் நீங்கள் புட்பால், ஹாக்கி, வாலிபால் முதலிவைகளுடன் இதுவும் சேர்ந்தது என்று நினைத்துவிடாதீர்கள்! இது புது மாதிரி, ஆச்சரியப்படத் தக்கது! நான் கண்ணாரக் கண்டதையே உங்களுக்கு எடுத்துச் சொல்லப்போகிறேன். உண்மையாகவே நடந்தது. நமது வீடுகளில் குழந்தைகள் விளையாடுவது போலவே, பெரிய பெரிய ஆசாமிகளும், வாலிபர்களும் வயோதிகர்களும், பெண்களும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். சிறு குழந்தைகள் மாதிரியே; ஏன்! அவர்களை விட உண்மையாகவும், உருக்கமாகவும் தங்கள் விளையாட்டில் கவனம் செலுத்தினார்கள் என்றால், நீங்கள் என்னை நம்பமாட்டீர்கள். அவ்வளவு தூரம் பேசுவானேன்? நானே திகைத்துப் போனேன். என் கண்முன் நான் பார்ப்பது கனவோ, நினைவோவென்று கூட சந்தேகித்தேன். அவ்விதமாக பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடினார்கள்.

இதை நான் பார்த்து ஒரு வருஷமாயிற்று. இப்பொழுதுதான் வெளியில் வாய்விட்டுச் செல்லுகிறேன். ஒரு வருஷத்திற்கு முன்பு பழனி மலைக்குப் போனேன். என்னைச் சிலர் வலிய அழைத்துச் சென்றார்கள். மலைமேலே போனோம். அங்கு கோபுரத்தோடு கூடிய கட்டிடங்கள் இருந்தன. என்னை அழைத்துச் சென்றவர்கள் நேராக உள்ளே போகாமல் அந்தக் கட்டிடத்தைச் சுற்றினார்கள். நானும் அவர்களுடன் சுற்றினேன். பிறகு ஒரு சிறு அறைக்குள் புகுந்தார்கள். அது போகர் என்னும் ஒருவர் அடங்கியதென்று சொல்லப்பட்டது. அங்கு ஒரு மரகத லிங்கமிருந்தது. நம்மிந்திய சகோதரர்கள் வணங்கும் லிங்கத்தைப்பற்றி நாம் குறை கூறலாமா! பிறகு முருகன் சன்னிதி என்னும் இடத்திற்குப் போனோம். அங்கு சிலை இருந்த இடத்திற்கு அடுத்துள்ள அறையில் நின்றுகொண்டோம். அவ்விடத்தில் சில முக்கியஸ்தர்களைத் தான் உள்ளே விட்டார்கள். அதற்கு வெளியே ஏகக்கூட்டம். ஆனால், ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனியே ஆளுக்கொரு புறமாக பாகித்துக் கொடுக்கப்பட்டு மத்தியில் வழி விடப்பட்டிருந்தது. அங்கு பெண்கள் அவர்களுக்குக்

கிடைக்கவேண்டிய பாக்கியத்தைப் பெற்றிருந்தார்கள். இம்மாதிரி முன்பெல்லாம் சுதந்திரமில்லையாம். அவ்விடத்தில் பெண்களுக்குச் சுதந்தரம் கிடைக்க என்னென்ன கிளர்ச்சிகளும், காரியங்களும் நடந்திருக்குமென்பதை நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள்.

கர்ப்ப கிரஹத்தின் உள்ளே திரை போடப்பட்டிருந்தது. அங்கு இரண்டு பிராமணர்கள் இருந்தார்கள். பிறகு திரை நீக்கப்பட்டது. அவ்வளவுதான்! "அரகரா, முருகா, தெண்டபாணி" என்ற கோஷம் காதுகள் செவிடு படும்படியாகச் செய்யப்பட்டது. சிலர் கை கூப்பி நின்றனர்; சிலர் தங்கள் கன்னத்தில் தாங்களே அடித்துக்கொள்ளும் காட்சி பார்க்கத்தகுந்தது; சிலர் தாங்களே தலையில் குட்டிக்கொண்டார்கள். இவைகளையெல்லாம் நான் கவனித்துச் சொல்வதிலிருந்தே நான் என்ன செய்துகொண்டிருந்தேன் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

இந்த அமளி கொஞ்சம் அடங்கிற்று; உள்ளே இருந்தவன் விக்கிரகத்தின் தலையில் விபூதியைக் கொட்டினான். பிறகு அதை இளநீர் விட்டுக் கழுவினான். பிறகு தேனை விட்டான்— அதற்குத் தலையில் மயிரில்லை என்ற தைரியமாய்த்தானிருக்கவேண்டுமென்று நினைத்தேன்--பின் அதைப் பன்னீர் விட்டுக் கழுவினான்; பிறகு சந்தனத்தை அப்பினான்; அதன் தலையில் வெட்டி வேரைச் சிகைக்குப் பதிலாக வைத்தான். இது மாதிரியே ஒவ்வொரு தடவையும், வெவ்வேறு விதமாக உடை உடுத்தித் திரையை நீக்கி நீக்கிக் காட்டியது ஜால வித்தைபோலிருந்தது.

ஒவ்வொரு தடவையும் திரையை எடுக்கும் பொழுதும் பெரிய குழந்தைகளாகிய பெரியவர்களுக்கு ஏற்பட்ட ஆனந்தமும், அவர்கள் செய்யும் சத்தங்களும், சிறு குழந்தைகள் கூட அவர்களுடன் போட்டி போட முடியாதபடி இருந்தன.

பிறகு சிலருடைய பெயர்களும், அவர்களுடைய நட்சத்திரங்களும் சொல்லப்பட்டன. அத்துடன் கொஞ்சம் பணமும் பிராமணர்களிடம் கொடுக்கப்பட்டது. அதாவது இன்ன நட்சத்திரத்தில் பிறந்த இன்ன பெயருடையான் என்று முருகனிடத்தில் அறிமுகம் செய்து வைப்பதற்குத்தராகவே அந்தப்பணம் கொடுத்தார்கள் என்பது தெரிய வந்தது. என்ன பேதமை!

பிறகு எல்லோரும் வெளியே வந்து உட்கார்ந்தோம். போகர் ஐரோப்பா தேசங்களுக்குப்போனது முதலிய விஷயங்கள் பேசினார்கள். முருகன் விக்கிரகம் நவ பாஷாணத்தினால் அமைக்கப்பட்டது என்பதைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும் போது, அதிலும் பாழாய்ப்போன அபிப்பிராயபேதம் வராமல் போகவில்லை. அதாவது அந்த விக்ரகம் அபிஷேகங்கள் செய்யப்படுவதால் தேய்ந்துகொண்டு வருகிறது என்றும், தேய வில்லை என்றும் சண்டையிட்டதன் பலனாகத் தேயுங்கட்சி, தேயாக்கட்சி என்று இருகட்சிகள் ஏற்பட்டன. ஆனால் இதைப் பற்றித் தகராறு அதிகம் நடக்கவில்லை.

இந்தச் சமயத்தில் ஒரு பெண்ணின் புடவையை இழுத்துத்தொங்கிக்கொண்டு ஒரு குழந்தை அழுதுகொண்டே தொந்தரவு செய்தது. அக்கூட்டத்திலிருந்தவர்களில் ஒருவர் அந்தப் பெண்ணைப் பார்த்து "ஏனம்மா குழந்தை அழுகிறான்" என்று கேட்டார். அதற்கு அந்தப்பெண், "இந்தத் தெண்டபாணி சாமி தனக்கு விளையாடுவதற்கு வேண்டுமாம்; இதை ஊருக்குக்கொண்டுபோகலாம், என்று தொந்தரவுசெய்கிறான்" என்று சொன்னாள். அக்கூட்டத்திலிருந்தவர்கள் எல்லாம் சிரித்தார்கள். பிறகு மற்றொருவர் அந்தப் பையனைப் பார்த்து, "டே தம்பி! அது சாமியடா; அதைக் கேட்கக்கூடாது வேறே உங்கம்மாளை வாங்கிக்கொடுக்கும்படிக் கேளடா" என்று சொன்னார். உடனே, அந்தப்பையன் தன் கூடப் பேசின மனிதனைப் பார்த்து "நீங்கள் மாத்திரம் அந்தப் பொம்மைக்கு பட்டுத்துணி கட்டிகிட்டும், நகை போட்டுகிட்டும் விளையாடலாமோ" என்று கன்னத்தில் அறைந்ததுபோல் பதில் சொன்னான். உடனே எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்களேயொழிய தாங்கள் சிறு பிள்ளைத் தனமாக நடந்துகொள்வதைப் பற்றி அச்சிறுவன் சொன்னது ஒருவருக்கும் தைக்கவில்லை—பக்தி மேலிட மேலிட புத்தி படிப்படியாய் கீழே வந்துவிடவெண்டியதுதானே!

பிறகு இராக்கால பூஜை முடிந்தபின் ஆண் பொம்மைச் சாமியை, பெண் பொம்மைகளிருக்கும் படுக்கை அறைக்குக் கொண்டுபோய் விட்டு விட்டார்கள். அதன் பின் எல்லோரும் மலையிலிருந்து கீழே வந்து, ஊருக்கு வந்து விட்டோம். ஆனால், அந்தச்சிறுவன் பெரியவர்களைப்பார்த்து "நீங்கள் மாத்திரம் பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடலாமா" என்று கேட்டது என் மனதை விட்டு அகலவில்லை.

"பெரியவர்களுக்குச் சிறுவன் சவுக்கடி" என்று பத்திரிகைகளில் பெரிய எழுத்துக்கள் போட்டு வெளியானால் நன்றாயிருக்குமென்று நினைத்தேன்.

ஒருநாள் வைணவர்கள் கோவிலில் ஏதோ விசேஷம் நடக்கிறதென்று எனது நண்பர்களுடன் அங்கு போனேன். அங்கே ஒரு அறுபது வயது கிழவர், ஒரு பொம்மையை ஊஞ்சலில் வைத்து தாலாட்டுப் பாட்டு சொல்லிக்கொண்டிருந்தார். அதுவும் ராகதாளத்தோடு. அந்தப்பாட்டுகளை உருக்கமாகச் சொல்வதைப்பார்த்தால், சிறு குழந்தைகள் சில சமயங்களில் மரப்பாச்சியைத் தொட்டிலில் போட்டு 'ரா, ரோ' என்று குளறிக் குளறி சொல்லிக்கொண்டு தொட்டிலை ஆட்டி விளையாடுவது உங்களுக்கு ஞாபகம் வந்துவிடும். ஏனென்றால், ஒரு பொருளைப்பார்த்தவுடன் அதுமாதிரியுள்ள மற்றொரு பொருளின் மீது ஞாபகம் வருவது சகஜமல்லவா? ஆனால் நீங்கள் ஒன்று கேட்கலாம். அதாவது பெரியவர்கள், வயோதிகர்களைப்பார்க்கும்பொழுது, சிறு பிள்ளைகள் ஞாபகம் வருவதெப்படி என்று வினவலாம். உங்களுக்கு வயதைப்பார்த்து அந்த ஞாபகம் வராது, அவர்கள் நடக்கும் தன்மையைப்பார்த்து, உங்களுக்குச் சிறு குழந்தைகள் ஞாபகம் வருமென்று சொன்னேன். பொம்மைகளை வைத்து விளையாடும் முறையில் சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும், ஒற்றுமையிருப்பதே அதற்குக் காரணம்.

எனக்குத்தோன்றுவதை கீழே எழுதி இதை முடித்துவிடுகிறேன் "இன்னும் ஒரு நூற்றாண்டு கழிந்தால், இவ்விதமான பெரியவர்களின் பொம்மை விளையாட்டு ஒன்று மிராததுமன்றி, இவைகளெல்லாம் கண்காட்சி சாலைகளில் வைக்கப்பட்டு ஒவ்வொரு விக்கிரகத்திற்கும் கீழே, அதைக்கும்பிட்டு வந்தவர்களைப்பற்றியும், அதைப்பற்றியும் ஒரு சீட்டு எழுதித் தொங்க விடப்படும்" என்பதே என்னுடைய அபிப்பிராயம்.

மதக்குறி என்பது, மாட்டு மந்தைக்காரன் தனது மாடுகளுக்குப்போடும் அடையாளம் போலவே, மதத்தலைவன் தனது மதத்தைப் பின் பற்றுகின்றவர்கள் என்பதைக்காட்ட ஏற்படுத்தப்பட்ட குறியேயாகும்.

ஈ. வெ. ரா.

# நாஸ்திகம்.

ஈ. வெ. ரா.

---

நாஸ்திகம் என்றால் கடவுள் இல்லை என்று சொல்வது என்பதாக இங்கு ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். எல்லா ஜனங்களுக்கும் நாஸ்திகம் என்று சொன்ன உடனேயே அந்த அருத்தம் தான் முதலில் தோன்றுகின்றது.

ஆனால் நாஸ்திகம் என்பதற்குப் பல அருத்தங்கள் சொல்லப்படுகின்றன.

ஒரு மதக்காரனை மற்ற மதக்காரன் நாஸ்திகன் என்று சொல்லுவதும் வழக்கத்தில் இருக்கிறது.

ஒரு மதக்காரனின் ஆதாரத்தை மற்ற மதக்காரனோ அல்லது அதே மதக்காரனோ தர்க்கிப்பதும், விவகரிப்பதும், சந்தேகப்படுவதும், சந்தேகம் தெளிய முயற்சிப்பதும் எல்லாம் நாஸ்திகம் என்று சொல்லப்பட்டு விடுகின்றது.

ஆதாரங்களைப்பற்றி தர்க்கிப்பது முதலியவைகளே நாஸ்திகமாய் விட்டால் கடவுளைப்பற்றிய தர்க்கம் விவகாரம் முதலியவை நாஸ்திகம் என்கின்ற தலைப்பின் கீழ் வருவது பெரிய காரியமாகி விடுமா?

ஆகவே நாஸ்திகம் என்பதும் ஒரு கடிவாளமில்லாத குதிரை என்றே சொல்லி விடலாம்.

நாம் இங்கு நாஸ்திகம் என்பதை ஒரு சர்வ சக்தி, சர்வ வியாபகம் உள்ள கடவுள் என்கின்ற ஒருவர் இருந்துகொண்டு, சிருஷ்டி ஸ்திதி சம்மார, அதாவது ஆக்கல் காத்தல் அழித்தல் என்கின்ற முத்தொழில்களையும் செய்து கொண்டும், உலக இயங்குதலுக்குக் காரண பூதராகவும் கர்த்தாராகவும் இருந்து வருகிறார் என்பதை மறுப்பதையே நாஸ்திகம் என்று வைத்துக்கொண்டு பேசுவோம்.

இப்படிப்பட்ட இந்த நாஸதிகம் என்பது கடவுள் என்கின்ற வார்த்தை என்று உண்டாயிற்றோ அன்று முதலே கட

வுள் இல்லை என்கின்ற வாதமான நாஸ்திகம் என்பது இருந்துகொண்டே வந்திருக்கிறது.

இந்த நாஸ்திகமானது இன்ன ஊர், இன்ன தேசம், இன்ன கண்டம் என்று இல்லாமல், உலகில் கடவுள் உண்டு என்று சொல்லக்கூடிய இடங்களில் எல்லாம் இருந்தே வருகின்றது. அது மாத்திரமல்லாமல் கடவுள் கற்பிக்கப்படுவதற்கு முன் இருந்த நிலையைக்கூட நாஸ்திக நிலை என்றுதான் சொல்ல வேண்டும். அன்றியும் மனித ஜீவனைப்பொறுத்த வரையில் கூட கடவுள் ஒருவர் உண்டு என்பதை ஊட்டுவிப்பதற்கு முன் நாஸ்திகத்தன்மையில் தான் இருந்து வருகின்றது என்று சொல்லவேண்டும்.

அப்படிப்பட்ட கடவுளைப்பற்றிய நம்பிக்கை இல்லை என்னும் நாஸ்திகம் இந்தியாவில் வெகுகாலமாகவே இருந்து வருகிறது அதாவது உலகாயுதம், சாருவாகம், சூனியவாதம், மாயாவாதம், பௌத்தம் முதலாகிய பல பிரிவுகள் மத ரூபமாகவே நாஸ்திகமாய் இருந்து வந்திருக்கின்றன.

இப்படிப்பட்ட பிரிவுகள் இந்தியாவில் ஏற்பட்டது பற்றியும், இருந்து வருவது பற்றியும் நமக்கு ஆச்சரியமில்லை.

ஏனெனில் இந்துக்கள் கடவுள் தன்மை அவ்வளவு மோசமானதாக கற்பிக்கப்பட்டிருக்கிறது.

எப்படி எனில் பல கடவுள்கள்; அதிலும் ஒரு கடவுளாவது முழுவதும் தெய்வீகத்தன்மையுடன் இருந்ததாகச்சொல்ல முடியாமல் மானுஷீகத்தில் இருந்து சிறிது முதிர்ச்சியடைந்து கடவுளாக ஆக்கப்பட்டதாகவும், கடவுளுக்கும் மனிதனுக்கும் முத்தொழில்களில், அதாவது ஆகாரம் நித்திரை புணர்ச்சி ஆகியவைகளில் வித்தியாசமில்லாமலும், சுக துக்கங்களுக்கு அதீதப்பட்டதாக இல்லாமலும், பிறப்பு இறப்புகள் கூட உடையனவாகவும், காமக்குரோதாதி குணங்களுக்கு ஆட்பட்டதாகவும், விருப்பு வெறுப்புக்கு அடிமைப்பட்டதாகவும், பிரார்த்தனை புகழ்ச்சி மன்னிப்பு ஆகியவைகளுக்கு இணங்கியதாகவும், மற்றும் பலமனிதகுணங்களோடு இருக்கும்படியானதாகவும் கற்பிக்கப்பட்ட கடவுள் உள்ள தேசத்தில் நாஸ்திக வாதம் ஏற்படுவது என்பதுஒரு அதிசயமான காரியம் அல்ல.

ஆனால் மேல் நாடுகளில்-கடவுளை மிக ஜாக்கிரதையாக கற்பனை செய்து மிக சுனாயுதமாக அநுபவித்து வரும் நாடு

களில்-செல்வத்தன்மையையும் மேல் கீழ்த்தன்மையையும் காப்பதற்கென்றே கடவுளைக் காப்பாற்றி வரும் நாடுகளான மேல் நாடுகளில்-எங்கும் இன்று நாஸ்திகவாதம், நாஸ்திகப்பிரசாரம் என்பவைகள் மிகச் சாதாரணமாக நடைபெற்று வருகின்றன; என்பதோடு அவை நாளுக்கு நாள் செல்வாக்கும் பெற்று மக்களின் ஆதரவும் ஆமோதிப்பும் பெற்று வருகின்றன. நாஸ்திகவாதத்தைத் தொழிலாளி மக்களோ ஏழை மக்களோ தான் செய்து வருகிறார்கள் என்பதற்கில்லாமல் செல்வவான்கள் கூட்டத்திலேயே மிகவும் மலிந்து கிடக்கின்றன. இங்கிலாந்து தேசத்தில் உள்ள பகுத்தறிவுச் சங்கமானது மதங்களை அழிக்க முயற்சிப்பதோடு நாஸ்திகத்தையே பெரிதும் பிரசாரம் செய்கின்ற சங்கமாகும். இச்சங்கம் பெரிதும் செல்வவான்களாலும் பெரிய பண்டிதர்களாலும் விஞ்ஞானிகளாலும் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் உள்ளவர்களை சமதர்மத்துக்கும் பொது உடமைக்கும் விரோதிகள் என்று கூடச் சொல்லலாம்.

மற்றும் உலகத்திலேயே செல்வம் கொழிக்கும் தேசமாகிய அமெரிக்கா தேசத்தில் நாஸ்திகப் பிரசாரமானது வெகு காலமாகவே பிரக்கியாதியாகவும் ஊக்கமாகவும் செய்யப்பட்டு வருகின்றது.

அவர்கள் தாங்கள் ஏன் நாஸ்திகரானார்கள் என்பதையும், நாஸ்திகத்தை ஏன் பரப்புகின்றோம். என்பதையும், அவர்களது சங்கத்திற்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கொள்கைகளையும் பற்றித் துண்டு பிரசுரங்கள் வெளியிட்டு உலகமெங்கும் இலவசமாய் அனுப்பி வருகிறார்கள்.

நேயர்கள் அதைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக அத்துண்டுப் பிரசுரத்தைக் கீழே குறிக்கின்றோம்.

“நாங்கள் நாஸ்திகர்கள் தான் ஏன் என்றால்” என்று ஆரம்பித்து 10-காரணங்கள் காட்டி இருக்கிறார்கள் அவை யாவன.

1. “கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதற்குப் போதிய ருஜு இல்லை.

2. அ:- உலகுக்கு ஒரு கடவுள் இருக்கவேண்டும் என்பதற்கு எவ்வித அவசியமும் காணப்படவில்லை.

ஆ:- கடவுளால் எவ்வித பிரயோஜனமாவது இருப்பதாக நாங்கள் கருதுவதில்லை.

இ:- கடவுள் இல்லாவிட்டால் இன்றுள்ள நிலையில் என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கும் என்பதும் விளங்கவில்லை.

3. ஒரு நல்ல கடவுள் என்பவர் சர்வ சக்தி, சர்வ வியாபகம் என்பதின் உண்மைப் பொருள் கொண்ட குணங்களையுடையவராக இல்லாவிட்டால் அவர் பிரயோஜனமில்லாதவரும், லக்ஷியம் செய்யப்படவேண்டியவர் அல்லாதவருமேயாவார்.

4 சர்வ சக்தி, சர்வ வியாபகமுள்ள கடவுள் நல்லவராக-நன்மையையே செய்பவராக இல்லாவிட்டால் அவர் வணக்கத்திற்கு உரியவராகமாட்டார்.

5. சர்வ சக்திவாய்ந்த ஒரு நல்லகடவுள் இல்லவே இல்லை.

அப்படி ஒரு கடவுள் இருக்குமானால், எல்லாம் தோஷமற்றதாகவும், நன்மையையே தரத்தக்கதாகவும், இனிச்செய்ய வேண்டிய காரியங்கள் பாக்கியிருக்கின்றன என்று இல்லாமல் சகலமும் பூரணத் தன்மை கொண்டதாகவும் இருக்கும். அந்தப்படி இல்லை; ஆதலால் அப்படிப்பட்ட கடவுள் இருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்ளுவதில்லை.

6. கடவுளால் உண்டாக்கப்பட்ட உலகங்களில் இந்த உலகமே மேலானதென்பதனால் மோக்ஷ உலகக் கதைகள் மெய்யாயிருக்கமுடியாது.

7. மனிதனின் உணர்ச்சியும், முயற்சியும், விஞ்ஞான ஆராய்ச்சியிலும், விடுதலையிலும், முற்போக்கிலும் தூண்டப்பட்டுக்கொண்டே இருப்பதால் கடவுளின் சர்வ சக்திக் கொள்கை விவகாரத்துக்கு உட்பட்டுவிடுவதுடன், அப்படிப்பட்ட கடவுள் உணர்ச்சியும் குறைந்துகொண்டு வருகின்றது.

8, மனிதர்கள் ஆதியில் சிறிதும் அறிவு விளக்கம் பெறாமல்மௌடீகத்தில் ஆழ்ந்திருந்தகாலத்தில், தனக்குத்தெரியாத விஷயங்களை எல்லாம் கடவுள் சக்தி, கடவுள் செயல் என்று கூறித் திருப்தியடைய ஒரு கடவுளைக் கற்பித்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

ஆதிகால மனிதர்களுடைய அபிப்பிராயங்களும், வாழ்க்கை அனுபவங்களும் ஒவ்வொன்றும் தவறுதலானவை; என்றும் கூறிவிட்டுக் கடவுளைப்பற்றியும், ஜீவனைப்பற்றியும் மாத்

திரம் அவர்கள் அறிந்திருந்தார்கள்; என்று சொல்லுவது பொருத்தமானதல்ல.

9. கடவுள் சக்தி என்று கருதப்பட்டு வந்தவைகள் பெரிதும் இன்று விஞ்ஞான சக்தி மூலம் ஆக்கப்பட்டு அவை மனித சக்திக்கு அடக்கப்பட்டு விட்டன. இதனால் அநேக விஷயங்களில் கடவுள் சக்திக்கு மதிப்பு இல்லாமல் போய் விட்டது.

10. குற்றம், கொடுமை, பொறாமை, பகைமை, அசூயை, காமம், வன்னெஞ்சம், முரண்பாடு, முதலாகிய அநேக கெட்ட குணங்கள் என்று சொல்லப்படுபவைகள் கடவுள் தன்மையாக இருந்து வருகின்றன.

ஆகவே கடவுளை நாங்கள் நம்புவதோ போற்றுவதோ பிரார்த்திப்பதோ இல்லை.

கைலாசத்திலோ அல்லது வைகுண்டத்திலோ அல்லது பர லோகத்திலோ ஒரு வித கடவுளும் இல்லை.

தாய், தந்தையற்ற குழந்தைகளையும், திக்கற்றவர்களையும் மனிதர்கள்தான் காப்பாற்ற வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் பாதுகாக்கப்படமாட்டார்கள். கடவுள் காப்பாற்றுவார் என்பது வீண் வார்த்தை.

நமது பிரார்த்தனைகளுக்கு சேவிசாய்க்கக்கூடிய ஒரு கடவுள் இல்லை! இல்லை! இல்லவே இல்லை!!!

மனிதர்களே மனிதர்களின் அபயக்குரலோசைகளுக்கு செவிசாய்த்து அவர்களுக்கு உதவிபுரிய வேண்டும்.

நரகமென்பது கிடையாது.

நாம் பயப்படக்கூடிய அல்லது பின்பற்றக்கூடிய, பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்கிற துர் எண்ணங்கொண்ட கடவுளாவது, அல்லது பூதமாவது எங்குமில்லை.

நம்பிக்கையினால் மன்னிப்பாவது அல்லது மோட்சமாவது ஏற்படமாட்டாது.

நம்முடைய செய்கைகளுக்கேற்ற பலாபலன்களை நாம் தைரியமாக எதிர்நோக்கி இருக்கவேண்டும்.

இயற்கையில் ஏக திருஷ்டியுள்ள உபகாரத்தன்மையாவது அல்லது துவேஷமாவது கிடையாது.

தடுக்கக்கூடியதும், தடுக்கக்கூடாததுமான துன்பங்களி லிருந்து தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளப் போரா டுவதுதான் ஜீவிய வாழ்க்கையின் தன்மையாயிருக்கின்றது. உலகம் விருத்தியடைய வேண்டியதவசியமானால் மனிதர்க ளின் ஒத்துழைப்பு மிக்க அவசியமாகவேண்டியிருக்கின்றது.

நாம் இறந்தபிறகு "நமது பாக்கி வேலையை"ப் புரிவதற்குச் சந்தர்ப்பம் வாய்க்காது.

செய்தால் இப்பொழுதே நாம் செய்யவேண்டும்; இல்லை யானால் எப்பொழுதுமே செய்யமாட்டோம்.

உண்மை, தயை, அழகு, சுதந்தரம், ஆகிய வைகளுக்கும் தெய்வீகத்தன்மை யென்பதற்கும் சம்பந்தம் கிடையாது.

இவைகள் யாவும் மனிதத்தன்மையின் இலக்ஷணங்களா கையால் மனிதர்கள் இவைகளைப் பாதுகாத்துக் காப்பாற்றிக் கொண்டேதான் வரவேண்டும். இல்லாவிட்டால் மனிதர்கள் பூமியில் இல்லாமலே நாசமாய்ப் போய்விடுவார்கள்."

என்று லக்ஷக்கணக்காகத் துண்டுப்பிரசுரங்கள் அச்சிட்டு வினியோகித்திருக்கிறார்கள். இதுபோல் இன்னும் பல எழுதிப் பிரசுரித்து வருகிறார்கள்.

மதங்களையும் நூல்களையும் மக்களுடைய நன்மை களுக்காக முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு கள் என்று கொள்ள வேண்டுமேயன்றி அவைகளைத் "தெய்வீகத் தன்மை" உடையன என்று கொள்ளுவதில் ஒரு பொருளும் இல்லை. ஆகவே அவற்றைக் கால நிலைக் கேற்றவாறு அமைத்துக்கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு. ஆதலால் பழையனவாகிய அவற்றை, இக்காலப் போக்கிற்கு ஒத்துவராத அக்குப்பைகளை, மக்களுடைய அறிவாகிய ஒளியின் மீது துருவேறி மழுங்கச் செய்யும் அவ்வழுக்குகளை அடியோடு களைந்தெறிந்து புதியனவற் றைப் புகுத்தல் வேண்டும்.

S. C.

# சுதந்தரம்.

புரபசர் லட்சுமி நரசு, B. A.,

"சுதந்தரம் பெறுவதே நமது உலக வாழ்வின் ஒரு நியதி; இவ்வுலகில் மக்களிடையில் ஏற்படுகின்ற ஆச்சரியங்களும், முயற்சிகளும், துயரங்களும் விடுதலை ஒன்றையே நாடி நிற்கின்றன" என்பது கார்லைல் ஞானியார் கூற்று.

சுதந்தரமே மனிதனுடைய பெரிய செல்வம். சுயேச்சையினாலேயே மக்களுடைய வளர்ச்சியானது சாத்தியமாகின்றது.

வியாதியினின்றும், கொடுமையினின்றும் விடுதலை பெறுவதே நாகரீகத்தின் ஆரம்பமாகும். சுதந்தரம் ஒழியுமானால் அதனோடு எல்லாம் ஒழிந்து விடுகின்றது; எஞ்சி நிற்பது ஒன்றுமில்லை.

சுதந்தரமடைந்த மனிதனுக்கு ஒரு முக்கிய சின்னமாவது சுயமரியாதையே. ஏதேனும் ஒரு ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டிருக்கும் வரையில் ஒரு மனிதனுக்குச் சுதந்தரமாவது, சுயமரியாதையாவது இருக்கமுடியாது.

ஒரு மனிதன் தனித்திருப்பதனால் சுதந்தரம் பெறமுடியாது. பிறரிடம் சகோதர வாஞ்சையாய் விடுவதன் மூலமாகவே சுதந்தரம் பெறமுடியும்.

எல்லா ஜீவராசிகளிலும் (தனியாக விட்டுவிட்டால்) மனிதன் ஒருவனே திக்கற்றவனாக நிற்கின்றான். அவன் தன் சகபாடிகளுடன் எப்பொழுதும் உறவும் பகையும் கொள்ளும் ஒரு சமூக ஜந்து.

"பிறரை நேசிப்பதே உண்மையான சுதந்தர வேட்கையின் அறிகுறி; அதிகார வேட்கை ஆணவத்தின் அறிகுறி" என்று ஹாசிலிட் என்னும் வியாசகர்த்தா சொல்லுகிறார்.

சுதந்தரம் பெற்ற ஒவ்வொரு மனிதனும், தன்னுடைய சொந்த நன்மையை, தன் மனப்போக்கின்படியே அடைய உத்தேசிக்கிறான். ஆனால் அவன் தான் பழகக்கூடிய ஒவ்வொருவருடைய நோக்கத்தையும் தன் தன்மைக்கேற்றவாறு ஒழுங்குபடுத்திக்கொண்டால் அல்லாமல் தன்னுடைய நோக்கத்தை

அடையமுடியாது. ஆதலால் அடிமைகளின் மத்தியில் ஒரு சுதந்தர புருஷன் வாழமுடியாது. தன்னைச் சுற்றி யுள்ளவர்களையும் தன்னைப்போல் சுதந்தரமுள்ளவர்களாக்க அவன் அவசியம் முயற்சி செய்யவேண்டும்.

நிபந்தனைகளையும், கட்டுப்பாடுகளையும் ஒழித்து அச்சமின்றிப் பகுத்தறிவின் படி ஒழுகுவதும், பிறருக்கு அடிமைப் பட்டிருப்பதினின்று விடுபடுவதும், வெறுக்கத்தக்க கட்டுப்பாடுகளை முறித்து உயர்ந்த ஒழுக்கமுறைப்படி தன் காரியங்களை நடத்திக்கொள்வதும் சுதந்தரத்தின் உயர்ந்த தோற்றங்களாகும். மனிதனுடைய பகுத்தறிவினால் ஏற்படுகிற தடைகளைத் தவிர மற்ற தடைகள் எல்லாம் மனிதனுடைய சுதந்தரத்துக்குத் தீங்கு செய்பவைகளே. அவைகள் அடிமைத்தனத்தை உண்டாக்குகின்றன.

எது சரி, எது தவறு என்று அறிந்துகொள்வதற்கும், எது உண்மை, எது பொய் என்று தெரிந்து கொள்வதற்கும் ஒருவனுக்கு உண்டாகும் சக்தியே உண்மையான சுதந்தரமாகும்.

ஒரு மனிதனுடைய செய்கை, இன்னொரு மனிதனுடைய செய்கையின் நகலாகவாவது, அல்லது அபிப்பிராயத்தின் எதிரொலியாகவாவது இருக்குமானால் மனித சமூகத்தில் எத்தகைய முன்னேற்றமும் இல்லாமல் போய்விடுகிறது.

சுயமாகச்சிந்தனை செய்து தன் வாழ்க்கைக்குரிய காரியங்களை நடத்தும் மனிதனே மற்ற மனிதர்களுக்கெல்லாம் உதாரணமாயிருக்கிறான்; அவன் செய்யும் காரியம் சரியாக இருக்குமானால் மற்றவர்களுக்கு அது முன் மாதிரியாக இருக்கிறது; தப்பாக இருக்குமானால் அது எச்சரிக்கையாக இருக்கிறது.

பயங்கொள்ளித்தனமும், குருட்டு நம்பிக்கையும், அர்த்த மற்ற அனுஷ்டானமும் சுதந்தரத்தை வளர்ப்பன அல்ல. சுதந்தரம் என்பதன் கருத்தில் ஒரு உண்மையும், கடமையும் அடங்கிக் கிடக்கின்றது.

அபிப்பிராய சுதந்தரத்திற்கும், பேச்சுச் சுதந்தரத்திற்கும் உள்ள சகல தடைகளையும் நீக்க ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டும்.

# திருடர்கள் ஜாக்கிரதை!

(மிஸ்டர் திங்கர்)

---

திருடர்கள் என்றால் எல்லாருக்கும் பயம். சின்னப் பிள்ளைகளை இருட்டு வேளைகளில் பயமுறுத்த "திருடன்" என்ற சொல்லை உபயோகிப்பதைப் பார்க்கிறோம். பெரியவர்களும் திருடர்கள் என்றால் பயப்படுகின்றார்கள். எங்கே அவர்களால் தங்களுடைய சொத்துச் சுதந்தரங்களுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று மிரளுகிறார்கள்.

திருடர்கள் குறைச்சலாக இருக்கிறார்கள்; திருடர் அல்லாதவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று நினைத்து விடாதீர்கள்! அப்படி தப்பாக நினைத்துக்கொண்டால் கட்டாயம் நீங்கள் ஏமாந்து போவீர்கள்.

திருடர்களில் பல ரகம் உண்டு. வெளிப்படையாகத் திருடர்களாக இருப்பவர்கள் வெகு சிலர். இவர்கள் ஒருவரும் அறியாமல் கன்னம் வைத்தோ, மூட்டையடித்தோ, முடிச்சவிழ்த்தோ, சட்டைப் பையில் கை போட்டோ திருடினாலும் உண்மையில் இவர்கள் பகிரங்கத் திருடர்களே ஆவார்கள்.

இந்த பகிரங்கத்திருடர்களால் அவ்வளவு பெரிய ஆபத்து ஒன்றும் வந்துவிடாது. ஏனென்றால், இப்படிப்பட்ட திருடர்கள் பெரிய பட்டினங்களிலும், ஜன நெருக்கமுள்ள இடங்களிலும் உலவிக்கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆதலால் நாம் பிரயாணம் பண்ணும்போதும், பெரிய நகரங்களில் உலவும்போதும், ஜனக்கூட்டத்தில் போகும்போதும் கூடியவரையில் ஜாக்கிரதையாகவே இருந்து கொள்ளுகிறோம். நம்முடைய மூட்டை முடிச்சுகளைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளுகிறோம். பகிரங்கத் திருடர்களை ஏமாற்றிவிடுகிறோம். ஆதலால் பகிரங்கத் திருடர்களைப் பற்றி நாம் அதிகமாகப் பயப்படவேண்டிய அவசியம் இல்லை.

ஒரு சமயம் பகிரங்கத் திருடர்களால் நமது பொருள் களவாடப்பட்டாலும் கூட, களவு போன பொருளைத் தவிர

வேறொரு நஷ்டமும் நமக்கு உண்டாகிவிடாது. திருடிக் கொண்டு போனவன் பிறகு நம்மை நெருங்கப் போவதே இல்லை. நம்மைக் கண்டால் கூட எங்கே கண்டுபிடித்துக்கொள்ளுகிறானோ என்று பயந்து தலை மறைவாகிவிடுவான்.

ஒரு தடவை திருட்டுக் கொடுத்துவிட்டால் பிறகு நாமும் வெகு ஜாக்கிரதையாகிவிடுவோம். அதன் பிறகு வெகு பத்திரமாக நம்முடைய பொருள்களைப் பாதுகாத்துக் கொள்ளுவோம்.

ஆனால் அந்தரங்கத்திருடர்கள் என்று பலர் உண்டு. அவர்களைக் கண்டுபிடிப்பது மகா கஷ்டம். அவர்கள் பிறர் பொருளைக் களவாடுவது மட்டும் அல்ல; தனது நன்மைக்காக எதையும், ஜன சமூகத்தைத் துன்பத்துக்குள்ளாக்குகின்ற எவ்வளவு பெரிய தீங்குகளையும் செய்வார்கள்.

இந்த அந்தரங்கத் திருடர்களை யாரும் திருடர்கள் என்று சுலபத்தில் கண்டுபிடிக்கமுடியாது. பார்த்தால் பரம சாதுக்களாகக் காணப்படுவார்கள். பெரிய மத பக்தர் போல் நடிப்பார்கள். ரொம்ப பயந்தவர்கள் போல் பாசாங்கு செய்வார்கள். யாரைக் கண்டாலும் மிகப்பணிவாக வணங்குவார்கள்; கும்பிடுவார்கள். பெரிய "சிவ பக்தர்" போல மேலெல்லாம் சாம்பலைக் குழைத்துப் பூசிக்கொள்ளுவார்கள். மிகுந்த "பக்தி"யுடையவர்களைப்போலத் தோத்திரங்கள் சொல்லி அழுவார்கள். அல்லும் பகலும் "தெய்வம்" தொழுவார்கள். அதிக ஆசாரமுடையவர்கள் போல் பாவனை செய்வார்கள். இவர்கள் அந்தரங்கத் திருடர்கள். அடேயப்பா! இவர்களுக்குத்தான் நாம் அதிகமாகப் பயப்படவேண்டும்.

இப்படிப்பட்ட திருடர்கள் உண்டா? இல்லையா? என்று கேட்டால் கட்டாயம் உண்டு என்றுதான் நீங்கள் பதில் சொல்லுவீர்கள் என்பது எனக்குத்தெரியும். ஆனால் யாரேனும், மதாபிமானிகள், தெய்வாபிமானிகள், எப்படி மத பக்தர்களையும், விபூதி பூசுகிறவர்களையும் திருடர் கூட்டத்தில் சேர்க்கலாம்? என்று கேட்டால் அவர்களுக்குக் கீழ்வரும் பாட்டைக் கூறுகிறேன்.

செழுங்கள்ளு நிறை சோலைத் தண்டலை நீள்
நெறியாரே திருடிக்கொண்டே

எழுங்கள்ளர் நல்லகள்ளர் பொல்லாத
கள்ளரினி யாரோவென்றால்?
கொழுங்கள்ளந் தம்முடன் கும்பிடுங்கள்ளர்,
திருநீறு குழைக்குங் கள்ளர்,
அழுங்கள்ளர், தொழுங்கள்ளர், ஆசாரக்
கள்ளர்இவர் ஐவர்தாமே.

இந்தப் பாட்டு என்னுடையதல்ல. ஒரு சிவனடியார் பாட்டு. மடத்துத் தம்பிரான் ஒருவர் பாடியது. அவர்தான் படிக்காசுத் தம்பிரான் என்பவர். இவரும் சந்நியாசியாக இருந்தவர்தான். இவருக்கு மத வேஷங்களும், ஆசார அனுஷ்டானங்களும் எதற்கு உபயோகப்படுகின்றன என்பது நன்றாகத் தெரிந்திருக்கும். அந்த அனுபோகத்தின் மூலமே இதைப் பாடி இருக்கிறார் என்பதில் என்ன சந்தேகம்?

மேற்கண்ட பாடலில் "பொருளைத் திருடிச் செல்பவர்களை நல்ல கள்ளர்" என்றும், "மனத்தில் வஞ்சகமுடன் கூழைக் கும்பிடு போடுவோர், சாம்பலைக் குழைத்துப் பூசுவோர், பக்தியுடையவர் போல் அழுவோர், தொழுவோர் மிகுந்த ஆசாரம் பாராட்டுவோர் ஆகிய ஐவரும் பொல்லாத கள்ளர்கள்" என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

ஆதலால் மத வேஷக்காரர்களே பொல்லாத திருடர்கள். இவர்கள் அந்தரங்கத் திருடர்கள். இவர்களை நம்பி ஏமாந்து போகாதீர்கள் என்று எச்சரிக்கை செய்வதற்காகவே அப்பெரியார் இப்பாடலைப் பாடி நமக்குத் தந்திருக்கிறார். அதையே நான் உங்கள் ஞாபகத்துக்குக் கொண்டுவந்தேன். உண்மையென்று பட்டால் நம்புங்கள், இல்லாவிட்டால் தள்ளுங்கள். ஏமாந்து போங்கள்! எனக்கென்ன நஷ்டம்?

---

விஞ்ஞான அறிவானது உலக மக்களை ஒன்று படுத்த முயலுகிறது. ஆனால் மத அறிவோ, மக்களைப் பாகுபடுத்தக் கற்பிக்கிறது; பிற மதத்தினரிடம் துவேஷம் பாராட்டக் கற்பிக்கிறது. இப்படித் துவேஷம் பாராட்டுவதானது கடவுளின் பெயரால் நடைபெறுகிறது.

ரவீந்திரநாத்தாகூர்.

# கேள்வியும், விடையும்.

கே:- எல்லாத் தேசங்களிலும், எந்தக் காலத்திலும் மனித சமூகத்தின் விரோதிகள் யார்?

வி:- மதக் கிருக்கர்களேயாவார்கள்.

கே:- விஞ்ஞான வளர்ச்சிக்கும், மனித சமூக முற்போக்கிற்கும் நிரந்தர விரோதிகள் யார்?

வி:- மதங்களேயாகும்.

கே:- சோம்பல் தன்மையை வளர்ப்பதும், சோம்பேறிகளை ஆதரிப்பதும் எந்த மதம்?

வி:- இந்து மதமேயாகும்.

கே:- நீ எந்த ஆதாரத்தைக்கொண்டு இப்படிச் சொல்லுகிறாய்?

வி:- சந்நியாசி ஆச்சிரமத்தை இந்து மதம் ஒப்புக்கொண்டிருக்கிறது. புரோகிதர் என்ற ஒரு சமூகத்தை சிருஷ்டித்திருக்கிறது. சந்நியாசிகளுக்கும் புரோகிதர்களுக்கும் அவர்கள் விரும்பியவைகளையெல்லாம் கொடுக்கவேண்டுமென்று சாஸ்திரங்களும், கதைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. இப்பொழுதும் அனேக மடங்களும், அனேக சோம்பேறிச் "சாமியார்"களும் திரிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஆதாரங்களைக் கொண்டுதான் சொன்னேன்.

கே:- பெண்களுக்கு எவ்வித உரிமையும் இல்லாமல் அடிமைத் தன்மையை மாத்திரமே விதித்திருக்கும் மதம் எது?

வி:- இந்து மதமேயாகும்:

கே:- எதைக்கொண்டு இப்படிச் சொல்லுகிறாய்?

வி:- "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்று உபதேசம் பண்ணுவது இந்த எண்ணத்துடன் தான்.

கே.- மனிதனுடைய குணங்கள், அறிவுகள், சக்திகள், ஆகியவைகளைக் கவனியாமல் பிறவியை மாத்திரமே கவனித்துப்போற்றவும். தூற்றவும், தூண்டுகின்ற மதம் எது?

வி:- இந்து மதமேயாகும்.

# சீனப் பெண்கள்.

நாட்டின் முற்போக்குக்கான எல்லாத் துறைகளிலும் இன்று சீனமாதர்கள் முதலில் நிற்கின்றனர். சைனா தேசத்தின் பெரிய நகரங்களிலெல்லாம் டாக்டர்களாகவும், உபாத்தியாயர்களாகவும், வக்கீல்களாகவும், நர்சுகளாகவும், குமாஸ்தாக்களாகவும், காரியதரிசிகளாகவும், டைப்பிஸ்டுகளாகவும் பெண் மக்கள் நிறைந்திருப்பதைக் காணலாம்.

சீன தேசத்தின் கல்வி நிலையைத் தெரிந்துகொண்டால் அந்நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்தையும் நன்கு அறிந்து கொள்ளலாம்.

சீன அரசாங்கம், பெண்களுக்குக் கல்விப் பயிற்சியளிக்கப்படும் என்று 1910-ம் ஆண்டில் ஒரு அறிக்கை வெளியிட்டது. உடனே சீன தேசம் முழுவதிலும் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் மொத்தம் 12-ஆயிரம் பெண்கள் சேர்ந்தனர். 12-வருஷங்களுக்குப் பிறகு 4-லட்சம் பெண்களுக்கு மேலாகவே ஆரம்பப் பாடசாலைகளில் படிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இப்பொழுது அந்நாட்டில் உள்ள எல்லாவகையான கல்வித் துறைகளிலும் ஏராளமான பெண்கள் சேர்ந்து கல்வி கற்று வருகிறார்கள்.

1922---23-ஆம் வருஷத்தில் சைனாவிலுள்ள கல்லூரிகளிலும், சர்வ கலாசாலைகளிலும் 247-பெண்கள் உயர்தரக் கல்வி கற்றுக்கொண்டிருந்தனர். 4-வருஷங்களுக்குப் பிறகு அவர்கள் தொகை 2100 ஆக உயர்ந்து விட்டது.

“உங்கள் பெண்களுக்குக் கல்விப் பயிற்சி அளியுங்கள்” என்று 1924-ம் ஆண்டில் எழுதி வெளியிடப்பட்ட பிரசுரத்தின் ஓசை இன்னும் அந்நாடெங்கும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இன்று வியாபாரத் துறையில் சீன மாதர்களே முன்னணியில் நிற்கின்றனர். ஷாங்கே நகரில் உள்ள “பெண்களின் கமர்ஷியல் அண்ட் சேவிங்ஸ் பேங்” பெண்களாலேயே நடத்தப்பட்டு வருகிறது; மிஸ். நியன் சோக்வூ என்னும் பெண்மணியே அதன் பொறுப்புள்ள நிர்வாகஸ்தர்.

இந்த பேங்கானது 1924-ம் வருஷத்தில் 2-லட்சம் டாலர்களை மூலதனமாக வைத்து ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது அதன் வருமானம் 5 லட்சம் டாலர்களாக இருந்து, 8-வருஷங்களுக்குப் பிறகு 50 லட்சம் டாலர்களாகப் பெருகி வந்திருக்கிறது. இப்பொழுது இந்த பேங் காங்கிங் ரோட்டில் ஒரு கெம்பீரமான தோற்றத்தையுடைய ஐந்தடுக்கு மாளிகையில் இருக்கிறது.

இன்றைய அரசியல் துறையில் நூற்றுக் கணக்கான பெண் மக்கள் மிக முக்கிய பங்கெடுத்துக் கொண்டு நாட்டின் நன்மைக்காகப் பாடுபட்டு வருகிறார்கள். அவர்களில் குறிப்பிடத்தகுந்தவர், காலஞ்சென்ற பெரிய புரட்சித்தலைவர் டாக்டர் சன்யாட்சென் அவர்களின் மனைவியான மேடம் சன்யாட்சென்னே. டாக்டர் சன்யாட்சென்னின் உயர்ந்த கொள்கைகளையும், நோக்கங்களையும் பரப்புவதில் இவ்வம்மையார் மிகவும் முனைந்து நிற்கின்றார். இதனால் அங் நாட்டுப் பொது ஜனங்கள் அனைவரும் அந்த அம்மையாரின் பேச்சைக் கேட்டு அதன்படி நடந்து வருகிறார்கள்.

நாங்கிங்கில் உள்ள தேசீய அரசாங்கத்தில் 200-க்கு மேற்பட்ட பெண்கள் உயர்ந்த உத்தியோகங்களை வகித்து வருகிறார்கள். காண்டன் சர்க்காரில் பெண்கள் போலீஸ் படை இருக்கிறது. காண்டன் பெண்கள் "துணிகரமான கடல் மனிதர்கள்" என்ற புகழ் படைத்தவர்கள். "செம்படவனோ, படகோட்டியோ தண்ணீரில் மூழ்கி விடுவாரானால் பெர்ல் நதியின் பெண்கள் அவர்களைக்காப்பாற்றி விடுவார்கள்" என்று வழங்கும் மொழி முற்றும் உண்மையானதாகும்.

ஷாங்கே போராட்டத்தின் போது, சீன மாதர்கள், "பெண்களின் தேசீய விடுதலைச்சங்கம்" என்று ஒரு சங்கம் ஏற்படுத்தினார்கள்; இவர்கள் 19-வது ரூட் பட்டாளத்திற்குப் பக்க பலமாக இருந்து பெரிய உதவி செய்தார்கள்.

புரட்சிக்காலங்களில் அமெஜான் (பெண்) பட்டாளங்கள் போர் புரிந்த செய்தி உலகறிந்ததாகும். காண்டனில் உள்ள பெண்கள், ஆகாய விமானப்பயிற்சியும், ராணுவத்தேர்ச்சியும் தங்களுக்குப் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று கேட்கின்றார்கள்.

பெண்கள், அன்னிய நாட்டினருடைய படையெழுச்சி தங்கள் நாட்டைப்பாதிக்காதவாறு காத்துக்கொள்வதற்காகப்

# விமலாவின் விடுதலை.

(S. C. பரன்.)

## I

"என்ன சும்மா இருக்கிறீர்களே! குழந்தை விமலா எத்தனை நாளைக்கு இந்தக்கஷ்டத்தை அனுபவிப்பாள். ஐயோ! அவள் ஒவ்வொரு தடவையும் எழுதும் கடிதத்தைப் பார்க்கும்போது மனம் பதைக்கின்றதே! பெற்ற வயிறு பற்றி எரிகின்றதே. அந்தத் தடித்தாண்டவராயனுக்கு எவ்வளவு புத்தி சொல்லியும் பயனில்லையே. இதற்கு ஒன்றும் வழி செய்யாமல் சும்மா இருந்தால், குழந்தையின் கதி என்னவாகும்?" என்று வருத்தத்துடன் பேசினாள் நாராயணி.

"ஆம், நானென்ன செய்வேன்? குழந்தையை எவ்வளவோ அருமையாகத்தான் வளர்த்தோம். அப்பொழுதே அந்தத் தடியனுக்கு வேண்டாம் என்றேனே! கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுக்காதே என்று குறுக்கே நின்றேனே! என் பேச்சைக் கேட்டாயா? குழந்தைகூட அவனைக் கட்டிக்கொள்ளச் சம்மதிக்கமாட்டேன் என்றாளே! நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பிடிவாதம் பண்ணிக் குழந்தையைப் படுகுழியில் தள்ளினாய். இப்போது படவேண்டியதுதான்! நீயும் நானும் மூலையில் உட்கார்ந்துகொண்டு அழுவதைத்தவிர வேறு என்ன செய்ய முடியும்? அந்தத்தடியனுக்குச் சொற்புத்தியும் இல்லை, சுயபுத்தியுமில்லை. யார் என்ன செய்வது?" என்றார் நமசிவாயப் பிள்ளை.

"சரி! எப்பொழுதும் இந்தப் பாட்டுதான். என்னமோ பிராப்தம்! விமலாவின் தலையெழுத்து அப்படியாயிற்று. அதற்கு நாம் என்ன செய்யலாம்? கொஞ்சத்திற்குக் கொஞ்சமாவது அவள் சுகப்பட ஏதாவது வழி செய்யக்கூடாதா?

---

பகிரங்கமாகவும், இரகசியமாகவும் பலவழிகளிலும் திறம்பட வேலை செய்து வருகிறார்கள்.

"சுயநலமற்ற தன்மை, தியாக புத்தி, சர்வ சகோதரத்துவம் இவைகளே பெண்களின் பூஷணமாக விளங்க வேண்டும்" என்று ஹுனான் பெண் கல்லூரியின் தலைவியான செல்வாக்குப்பெற்ற டாக்டர் பி. எஸ். செங் என்பவர் சமீபத்தில் கூறியிருப்பதே சீனப்பெண்களின் முன்னேற்ற நோக்கத்தையும் வளர்ச்சியையும் காட்டப் போதுமான உதாரணமாகும்.

வீணாக என்மேல் இம்மாதிரி குற்றஞ் சுமத்திக்கொண்டிருந்தால் காரியம் ஆகிவிடுமா?'' என்றாள்.

''சரி! சரி!! இது ஒன்று கற்றுக்கொண்டாய்! பிராப்தம், தலைவிதி என்று சொல்ல. உன்னுடைய முட்டாள் தனந்தான் தலைவிதியும் பிராப்தமும். முன் யோசனையுடன் நடந்து கொண்டிருந்தால் தலைவிதியும் பிராப்தமும் என்ன செய்திருக்கமுடியும்? விவேகானந்தன் எவ்வளவு அருமையான பையன்! தங்கக் கம்பி! அவனுக்குக் கொடுத்திருந்தால் விமலாவின் வாழ்க்கை எவ்வளவு சந்தோஷகரமாக இருக்கும்? நாமும் அதைப் பார்த்து எவ்வளவு சந்தோஷப் பட்டுக்கொண்டிருக்கலாம்? பாவி! நீ தானே கெடுத்தாய்! அண்ணன் மகன் அண்ணன் மகன் என்று அலைந்தாயே! சொத்து! சொத்து!! என்று துள்ளினாயே! இப்பொழுது படு!'' என்றார் பிள்ளை. இதைக் கேட்டவுடன் நாராயணி வாயிலிருந்து வேறு பேச்சு எழவில்லை. பேசாமல் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

நமசிவாயப் பிள்ளைக்கு சுமார் 55-வயது இருக்கலாம். அவர் மனைவி நாராயணிக்குச் சுமார் 45-வயதிருக்கும். இவர்கள் திருவல்லிக்கேணியில் ஒரு சிறிய மாடி வீட்டில் வசித்து வந்தார்கள். நமசியவாய பிள்ளை கண்ட்ராக்டர் வேலை செய்த தன் மூலம் 50-ஆயிரம் ரூபாய் வரையிலும் சேர்த்து வைத்திருந்தார். இவர்களுக்கு விமலா என்னும் ஒரே பெண் குழந்தையைத்தவிர வேறு பிள்ளை இல்லை. அந்தப்பெண்ணை நாராயணியின் பிடிவாதத்தினால் அவள் அண்ணன் மகன் தாண்டவராயன் என்பவனுக்குச் சிதம்பரத்தில் கல்யாணம் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. கல்யாணமாகி இரண்டு ஆண்டுகள் ஆயின. இந்த இரண்டு வருஷங்களும் பெரும்பாலும் இவர்கள் இருவரும் இந்த மாதிரியே பேசித் துக்கப்பட்டுக் கொண்டிருந்தனர்.

## II

இரவு மணி 12 இருக்கும். தெருவில் நடமாட்டமில்லை. முனிசிபல் மின்சார விளக்குகள் மாத்திரம் ஜொலித்துக்கொண்டிருந்தன. சிதம்பரத்தில் கிழ வீதியில் ஒரு மேற்குப்பார்த்த வீடு. அது ஒரு மாடி வீடாயிருந்தாலும், குடியிருக்கும் வீடாயிருந்தாலும் என்னவோ பார்த்தால் பாழும் வீடாகத்தான் காணப்பட்டது.

அவ்வீட்டின் கொல்லைப்புறத்தில் ஒரு ஆழமான கிணறு. அங்கு வெளிச்சம் இல்லை. இருட்டு. ஒரு மங்கை சுமார் 18-

வயதுடையவள்; கிணற்றண்டை நிற்கின்றாள். தங்கத்தை உருக்கி வார்த்தாற்போன்ற மேனி; ஆனால் அவ்வுடம்பு மிகவும் இளைத்துச் சோர்ந்திருக்கின்றது. சிவந்த கன்னங்கள் தான்; ஆனால் அவைகள் வற்றி இருந்தன. பார்ப்போரை மகிழ்விக்கும் அழகிய முகந்தான்; ஆனால் அதன் இயற்கைப் பொலிவு மறைந்து துக்கத்தினால் உரு மாறியிருந்தது. நீண்டு அகன்ற விழிகள் தான்; ஆனால் அவை அச்சத்தினால் நீர் விட்டு விழித்து வெருண்டு கொண்டிருந்தன. சுருண்டு நீண்ட கரிய கூந்தல் தான்; ஆனால் அது எண்ணெய் கண்டு பலநாட்களிருக்கும்; வாசனை மலர் தரித்து மாதங்கள் பலவிருக்கும். இத்தகைய பரிதாபகரமான மங்கை துக்கமே உருவெடுத்தது போல் நின்று எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

"இந்தப்பாவியுடன் இருந்து எத்தனை நாள் வாழ்க்கை நடத்தமுடியும்? ஒரு நாள் இரண்டு நாளா? இரண்டு வருஷம் கஷ்டப்பட்டுப்பார்த்து விட்டோம். அவன் ஒரு அணுவளவு கூடச் சீர்திருந்தவில்லை. நாளுக்கு நாள் அவனுடைய அக்கிரமமும், அட்டகாசமும்வளர்ந்துகொண்டே வருகின்றன. இருந்த சொத்துக்களையெல்லாம், குடியிலும் சூதிலும் விபசாரத்திலும், இழந்தான். நான் அணிந்திருந்த நகைகளையும் கொண்டுபோய் விற்றுப்பாழாக்கினான். துணிகளையெல்லாம் தூக்கிக்கொண்டுபோய் தொலைத்து விட்டான். இன்னும் என்னைப்பணம்! பணம்!! என்று தொந்தரவு பண்ணுகிறான். நானும் என் தந்தையிடமிருந்து எவ்வளவோ பணம் வாங்கிக் கொடுத்து விட்டேன் இன்று மாலையில், கேட்டவுடன் 100-ரூபாய் கொடுக்கவில்லையென்பதற்காக அடித்த அடியின் வலி இன்னும் மாறவில்லை. காயம் உடம்பெல்லாம் அப்படியே இருக்கின்றது. இனி என்னால் பொறுக்கவே முடியாது. உயிர் விடுவதே மேல். ஐயோ! அப்பொழுதே என்னை என் தந்தையார் விருப்பப்படி விவேகானந்தனுக்கு மணம் செய்து கொடுத்திருந்தால் எனது வாழ்க்கை எவ்வளவு இன்பகரமாக இருக்கும்? என் அன்னையின் பிடிவாதத்தினால் அல்லவா நாம் இப்படிக் கஷ்டப்பட நேருகிறது? நாம் இறக்குமுன் அவரை ஒரு முறை பார்க்கவேண்டுமென்னும் ஆசை இப்பொழுது என்னைத்தடை செய்கிறதே!" என்று தானே முணு முணுத்துக்கொண்டு திரும்பி வீட்டிற்குள் நுழைந்து விட்டாள்.

அவள் தற்கொலை செய்து கொள்ளவே கிணற்றண்டை போனாள். அப்பொழுது விவேகானந்தனைப் பற்றிய நினைவு வந்ததலால் அவள் உயிர் தப்பிற்று. இம்மங்கைதான் விமலா என்பவள்.

## III

விவேகானந்தன், நமசிவாயப்பிள்ளை குடியிருக்கும் நாலைந்து வீட்டிற்கு அடுத்தாற்போல் ஒரு சிறிய வீட்டில் வசித்து வந்தான். அவனுடைய தாய் தந்தையர் மிகவும் ஏழை. அவன் தகப்பனாருக்கு ஒரு வெள்ளைக்காரக் கம்பெனியில் பியூன் வேலை. மாதம் பதினைந்து ரூபாய் சம்பளம். அந்தச் சொற்ப சம்பளத்தைக் கொண்டு, விவேகானந்தனை S. S. L. C. வரையிலும் படிக்க வைத்திருந்தார். ஒரு முறையில் நமசிவாயப் பிள்ளைக்குச் சொந்தக்காரர்கள்.

விவேகானந்தன், நல்ல அழகன்; அழகிற்கேற்ற குணசாலி; துஷ்டர்கள் சாவகாசத்தை அறவே விடுத்தவன். இளம் பருவத்திலேயே பெருந்தன்மையான குணமுடையவனாக இருந்தான். புத்தகம் படிப்பதும், பத்திரிகைகள் படிப்பதும் அவன்வேலை. பத்திரிகைகள் படிக்கவேண்டியே அடிக்கடி நமசிவாயப் பிள்ளை வீட்டிற்கு வருவான். அப்பொழுது பல பொது விஷயங்களைப் பற்றி இருவரும் சம்பாஷிப்பதுண்டு.

அவனுக்கும் விமலாவின்மேல் அன்புண்டு. அவளுக்கும் அவன்மேல் அன்புண்டு. இருந்தும் ஒன்றும் பயனில்லாமல் போயிற்று. நமசிவாயப் பிள்ளைக்கு விவேகானந்தன்மேல் பிரியமிருந்தும், நாராயணியின் பிடிவாதத்தினால் விமலாவின் கதி அப்படியாயிற்று.

விவேகானந்தனுக்கு இன்னும் மணமாக வில்லை. மணம் செய்து கொள்ளும் உத்தேசமும் இல்லை. விமலாவுக்கு மணமானதிலிருந்து அவனுக்கு உலகவாழ்வில் ஒரு வெறுப்பு. பெண்களைக் கண்டால் பெரிய அருவருப்பு. அவன் பிறரிடம் தனதுமனத்துயரத்தை வெளிக்காட்டிக்கொள்வதில்லை யென்றாலும் தனியாக இருக்கும்போது ஒரு பித்தனைப்போலவே காணப்படுவான்.

ஒரு நாள் இரவு மணி 8 இருக்கும். நமது விவேகானந்தன் ஏதோ காரியார்த்தமாக எழும்பூர் ஸ்டேஷனுக்குக் கால்நடையாக வந்துகொண்டிருந்தான். கோமளீசுவரன் பேட்டைவழியாக வரும்போது ஒரு சந்தில் ஏதோ கொஞ்சம் அரவம் கேட்டது. என்ன வென்று உற்றுநோக்கினான். ஒரு விதமான திணறல் சத்தமும், இருவர் மல்லாடுவது போன்ற ஓசையும் கேட்டது.

உடனே சந்திற்குள் ஓடினான். அங்கே ஒரு முரட்டு ரிக்ஷாக்காரன் குடித்து வெறித்திருந்தான். பக்கத்தில் ரிக்ஷாவும் கிடந்தது. ஒரு பெண் வாயில் துணி திணிக்கப்பட்டுக்

கீழே கிடந்தாள். அவள் கைகள் கட்டப்பட்டிருந்தன. அப் பெண்ணை அவன் கற்பழிக்க முயன்றுகொண்டிருந்தான். அவள் அவனுக்கு இடங்கொடாமல் சமாளித்துக் கொண்டிருந்தாள்.

இதைக் கண்ட விவேகானந்தன் திடீரென்று பாய்ந்து அந்த ரிக்ஷாக்காரனை உதைத்து அப்புறம் தள்ளினான். அந்தப் பெண்ணின் வாயிலிருந்த துணிகளை எடுத்தான். கை கட்டுகளை அவிழ்த்து விட்டான். இதற்குள் ரிக்ஷாக்காரன் ஓடிவிட்டான். அவள் மிகவும் சோர்ந்து களைப்புற்றிருந்தாள். நிற்கவும் நடக்கவும் சக்தியற்றிருந்தாள்.

மெதுவாக அவளை அழைத்து வந்து ரோடு ஓரத்தில் நிறுத்திவிட்டுப் பக்கத்தில் இருந்த கடைக்குச் சென்று ஒரு சோடா வாங்கிக்கொண்டு வந்து கொடுத்து அவள் களைப்புச் சற்று நீங்கும்படி செய்தான். பின்னர் இருவரும் விளக்கு வெளிச்சத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் உற்று நோக்கினர். ஆ! அப்பொழுது அவர்கள் அடைந்த ஆச்சரியம் அளவிடக்கூடியதல்ல. இருவருக்கும் என்ன பேசுவதென்றே புரியவில்லை. ஒருவரை ஒருவர் வியப்பால் உற்று நோக்கினர் இருவர் கண்களிலிருந்தும் அவர்கள் அறியாமலே நீர்த் தாரை ஒழுகிற்று. அவள்தான் நமது விமலா. விமலாவும், விவேகானந்தனைமறந்தவள் அல்லள். விவேகானந்தனும் விமலாவை மறந்தவன் அல்லன். திடீரென்று எதிர்பாராத சந்திப்பு.

சிறிது நேரத்திற்குள், விவேகானந்தன் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான். "கண்ணே! விமலா! ஏது! இந்நேரத்தில் இங்கே அகப்பட்டுக்கொண்டாய். நீ சிதம்பரத்தில் அல்லவா இருக்கிறாய்! இங்கு எப்படி வந்தாய்!" என்று மிகவும் பரிவோடு கேட்டான்.

அவள் தன் கணவன் கொடுமைகளையும், அவனால் தான் பட்ட கஷ்டங்களையும் கூறிக்கடைசியாகத்துன்பம் பொறுக்க முடியாமல் தாய் வீட்டையடையப் புறப்பட்டு வந்ததாகவும், எழும்பூரிலிருந்து ரயிலைவிட்டு இறங்கி ஒரு ரிக்ஷாவில் வரும் போது ரிக்ஷாக்காரன் தன்னை மானபங்கப்படுத்த முயன்றதையும் கூறி, அப்போது விவேகானந்தன் வந்து தன்னைக் காப்பாற்றியதற்கு நன்றி கூறியும் கண்ணீர் விட்டாள்.

உடனே விவேகானந்தன் அவளுக்குச் சமாதானம் சொல்லி அவளை அழைத்துக்கொண்டுபோய் அவளுடைய தந்தை வீட்டில் விட்டுச்சென்றான்.

## IV

மாலைமணி $6\frac{1}{2}$ இருக்கும். சென்னைகடற்கரையோரத்தில் ஒருஅழகியகட்டிளைஞனும் ஒரு யவ்வன மங்கையும் துக்கமே வடிவாக உட்கார்ந்திருந்தனர். தம்முள் யார் முதலில் பேசுவது? என்ன பேசுவது? என்பன அவர்கள் மனதில் ஊசலாடிக் கொண்டிருந்தன. கடலானது அவர்களுடைய பரிதாப நிலைமையைக் கண்டு வருந்துவதுபோல், ஓ வென்று இரைந்துகொண்டிருந்தது இச்சமயத்தில் விவேகானந்தன் மனதைத் தானாகவே திடப்படுத்திக்கொண்டு முதலில் பேச ஆரம்பித்தான். "விமலா! என்ன யோசனை செய்கிறாய்? ஏன் உன் வாழ் நாள் வீணாகவேண்டும்? விவாக விடுதலை செய்து விட்டு, மறு மணம் செய்து கொள்வதில் என்ன தவறு இருக்கிறது?" என்றான்.

"அது இனி எப்படி முடியும்? நமது பாழும் இந்து சமூகம் அதற்கு அனுமதிக்குமா? மத விரோதம் என்றும் சொல்லுவார்களே! உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியுமா? நமது கோரிக்கை இந்த ஜன்மத்தில் பாழாயிற்று. இனி மறு ஜன்மத்தில்தான்" என்றாள் விமலா.

"எல்லாந்தெரிந்த நீயும் இதற்கு அஞ்சலாமா? உன் கணவனோடு சேர்ந்து நீ சுகமாக வாழ்வதாய் இருந்தால் நான் மிகவும் சந்தோஷப் படுவேன். நீயோ இனி அவனுடன் வாழப் போவதில்லை என்று சொல்லுகிறாய்! தக்க இளம் பருவமுடைய நீ-உலக நாகரீகம் அறிந்த-கற்றறிந்த நீ உன் வாழ் நாளை வீணாக்குவது சரியல்ல என்றுதான் சொல்லுகின்றேன்! வேறு ஜென்மம் உண்டு என்று நம்பி ஏமாறாதே! ஜென்மம் உண்டு என்பது புரோகிதர் புரட்டு!" என்றான்.

"ஆம்! இனி நான் அந்தக் குடிகாரனை, முரடனை, சூதாடியை, வன்னெஞ்சனைச் சந்திக்கவே மாட்டேன். அவனை ஒருபொழுதும் நான் கணவனாக நினைத்ததே இல்லை. இனி நினைக்கப்போவதுமில்லை. இது உண்மைதான்" என்றாள்.

"சரி! விமலா! நான் சொல்வதைக் கொஞ்சம் யோசனை செய்து பார்த்துப்பிறகு உனது முடிவைச்சொல்! தனக்குப்பிடிக்காத மனைவியை வேண்டாமென்று தள்ளிவிட்ட ஆடவர்கள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் தாம் விரும்பும் வேறு பெண்களை மணந்து சுகமாக வாழ வில்லையா? அதைச்சமூகம் தவறு என்று கொள்ளுகிறதா? மதம் குற்றம் என்று சொல்லுகிறதா? அதைப்பற்றி உலகம் பழி கூறுகிறதா? இல்லையே.

அதைப்போல் பெண் மக்களும் செய்து கொண்டால் அதில் என்ன குற்றமிருக்கிறது? ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதியென்பது சரியா? இந்த அக்கிரமம் நமது நாட்டைத்தவிர வேறு எந்நாட்டிலாயினும் இருக்கிறதா?'' என்றான்.

''அன்பரே நீர் சொல்லுவது சரிதான்; அறிவுக்குப்பொருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால் வழக்கம் தடை செய்கிறதே. வழக்கத்தை மீறினால் சுற்றத்தாரால் வெறுக்கப் படமாட்டோமா'' என்றாள்.

''கண்ணே! விவாகவிடுதலையும், மறுமணம்செய்துகொள்வதும் தவறல்ல. என்பதை ஒப்புக்கொள்ளுகிறாய்! ஆனால் வழக்கத்திற்கு விரோதம் என்பதற்காகப் பயப்படுகிறாய்! அறிவுக்கு ஒத்தபடி நடப்பதே சிறந்ததாகும்; ஆண்மையாகும். பழக்கத்திற்குப்பயந்து முட்டாள் தனமாக நடப்பது நேர்மையல்ல. மூடர்களின் பழிப்புக்கு அஞ்சினால் சிறந்த காரியங்களைச் செய்ய முடியாது. நீ மறுமணம் செய்துகொள்ளத் துணிவாயானால் நமது சமூகத்திற்கே ஒரு சிறந்த வழிகாட்டியாவாய். சமூகக்கட்டுப்பாட்டை உடைத்துப் பெண்கள் சுதந்திரத்திற்கு வழி கோலியவளாவாய். பெண்களை அடிமையாக்கிக் கொடுமைப்படுத்த இந்து சமூகம் ஏற்படுத்தியிருக்கும் இரும்பு விலங்கைத் தவிடு பொடியாக்கின பெருமையைப்பெறுவாய்! என்னுடைய வாழ்நாளும் கடைத்தேறும்'' என்றான்.

''அன்பரே! நீர் சொல்வது சரிதான்! நானும் அதற்குத் துணிகிறேன். ஆனால் இதற்கு என் தாய் தந்தையர் சம்மதிக்கமாட்டார்களே என்ன செய்வது?. அவர்களுடைய சம்மதத்தை எப்படிப் பெறுவது?''என்றாள்.

''கண்ணே! நாம் எப்பொழுது ஒரு சிறந்த காரியத்தைச் செய்யத் துணிந்துவிட்டோமோ அப்பொழுது பிறருடைய சம்மதத்தையும் தயவையும் எதிர்பார்ப்பது தவறாகும். முதலில் அவர்கள் சம்மதிக்காவிட்டாலும், நாம் மணம் செய்துகொண்டபிறகு கொஞ்சம் கொஞ்சமாகச் சரிப்பட்டு வந்துவிடுவார்கள். ஆதலால் அதற்காகப் பின்வாங்க வேண்டாம். நாளையே சிதம்பரத்தில் உள்ள அந்தக் குடிகாரனுக்கு ஒரு நோட்டீஸ் கொடுத்து விடலாம். நாம் இன்னும் இரண்டு தினத்திற்குள் நமது மணத்தை முடித்துக் கொள்வோம்'' என்றான். அவளும் இதற்குச் சம்மதித்ததுபோல் தலையசைத்து நாணத்தோடிருந்தாள். பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் இருவரும் பிரிந்துசென்றனர்.

## V

விமலாவும் விவேகானந்தனும் எங்கேயோ ஓடிவிட்டார்கள் என்ற செய்தி ஊரெங்கும் பரவிவிட்டது. விவேகானந்தனுடைய தாய் தந்தையர்களும் அவனை எங்குங்கோ தேடினார்கள்; அகப்படவில்லை. நாராயணியும், நமச்சிவாயப் பிள்ளையும் விமலாவின் கதியையும் செயலையும் எண்ணி வருந்தினார்கள். அவளுடைய செயலுக்குத் தாங்களே காரணம் என்பதை எண்ண எண்ண அவர்களுடைய துக்கம் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போயிற்று. இவ்வாறு 5-ஆண்டுகள் கழிந்தன. விமலாவின் பெற்றோர்கள் விவேகானந்தனுடைய பெற்றோருக்குச் சமாதானம் சொல்லுவதும், விவேகானந்தனுடைய பெற்றோர்கள் விமலாவின் பெற்றோர்களுக்குச் சமாதானம் சொல்லுவதுமாக இரு குடும்பத்தினரும் காலங் கழித்துக்காண்டிருந்தனர்.

நமசிவாயப் பிள்ளைக்கு, ஆரம்பத்தில், விமலாவின் மேலும், விவேகானந்தன் மேலும் கோபமிருந்தாலும் அக்கோபம் நாளடைவில் மாறிவிட்டது. அவர்கள் செய்த காரியம் சரியென்ற முடிவுக்கு வந்ததுவிட்டார் "பெண்கள் அயோக்கியனாவோ, குடிகாரனாகவோ, கொடுமைப் படுத்துகின்றவனாகவோ, தீராத வியாதியஸ்தனாகவோ, ஆண்மை இழந்தவனாகவோ, தன் மனதிற்கு ஒத்தவனல்லாதவனாகவோ உள்ள ஒரு புருஷனை விட்டுப் பிரிந்து தன் மனதிற்கேற்ற வேறொரு ஆடவனை மணம் செய்துகொண்டு இன்ப சுதந்தரமுடன் வாழ்வது தவறல்ல" என்னும் கொள்கையை ஒப்புக்கொண்டிருந்தார். இப்பொழுது இவர் வயதேறியவராயிருந்தாலும் ஒரு சிறந்த சமூகச் சீர்திருத்தவாதியாக விளங்கினார்

இவர் மனதில் எப்படியாவது தன்மகளையும் மருமகனையும் கண்டுபிடித்து அழைத்து வந்து வீட்டோடு வைத்துக் கொள்ளவேண்டும் என்னும் பேராவல் குடிகொண்டிருந்தது. நாராயணியின் மனத்திலும் இவ்வெண்ணமே இருந்தது.

இப்படி இருக்கும்போது ஒரு நாள் காலை 8-மணிக்கு நமசிவாயப் பிள்ளை விலாசத்துக்கு வந்துள்ள ஒரு கவரை தபால்காரன் கொண்டுவந்து கொடுத்தான். அதன்மேல் ரெங்கூன் என்ற முத்திரை இடப்படிருந்தது. உடனே கவரைப் பிரித்தார். உள்ளிருந்த கடிதம் கீழே வருமாறு:-

விவேகானந்தன், ரங்கூன்.
பி. எஸ். ஆர். கம்பெனி, 20—5—35.

அன்பு மிக்க தந்தையே! அன்னையே! அடியாள் விமலா வணக்கம்பல. சென்ற 4-வருஷங்களாகத் தங்களை ஒரு பொழுதும் மறந்தறியேன். எனது மறைவு ஆரம்பத்தில் தங்களுக்கு அதிக கோபத்தையும், அவமானத்தையும் உண்டாக்கியிருந்தாலும், இப்பொழுது அவை மாறி என்மீதும் என் கணவர் மீதும் அன்புடையவர்களாக இருப்பீர்களென்று கருதியே இக்கடிதத்தை எழுதத் துணிந்தேன்.

பெண்களுக்கு எல்லாவகையிலும் ஆண் மக்களைப் போலவே சுதந்தரம் வேண்டும் என்று பெண்மக்கள் கிளர்ச்சி செய்வதையும், அதை அறிஞர்களான, சீர்திருத்தவாதிகளான அனைவரும் ஒப்புக்கொள்வதையும் நீங்கள் அறிவீர்களென்றே நினைக்கின்றேன். இதற்காகத் தென்னாட்டிலுள்ள பகுத்தறிவு இயக்கம் பாடுபட்டு வருவதையும் பத்திரிகைகள் மூலமாகவாவது உணர்ந்திருப்பீர்களென்றும் கருதுகின்றேன்.

அந்தப் பாவியிடம் நான் பட்ட கஷ்டங்களை இப்பொழுது நினைத்தாலும் கனவு போல் காணப்படுகிறது. இப்பொழுது நான் இளமைப் பருவமுதல் காதலித்து வந்த விவேகானந்தரையே மணந்துகொண்டேன். எங்கள் மணம் சென்னையிலேயே ரிஜிஸ்டராயிருக்கிறது.

மணம் புரிந்துகொண்ட மறுநாளே நாங்கள் பர்மாவுக்குப் புறப்பட்டு வந்துவிட்டோம். இவ்வூரில் மேற்கண்ட கம்பெனியிலேயே இந்த 5-வருஷங்களாக என் கணவர் குமாஸ்தாவாக இருந்து வருகிறார். அவருக்குக் கிடைக்கும் சொற்ப சம்பளத்தைக் கொண்டு எங்கள் குடும்ப வாழ்வு மிகவும் மகிழ்ச்சிகரமாகக் கழிகிறது.

குழந்தை ஜெயகரன் எங்கள் வாழ்க்கையை மேலும் மேலும் இன்பகரமாகச் செய்துகொண்டிருக்கிறான்.

இப்படிக்குத் தங்கள் அன்பை மறவாத,

விமலா.

இக்கடிதத்தைப் படித்து முடித்தவுடன், நமசிவாயப் பிள்ளையின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் சிந்தியது. நாராயணியும் கடிதத்தைப் படித்து விஷயத்தை உணர்ந்து ஆசையும் துக்கமும் உடையவளாய்க் கண்ணீர் விட்டாள். இச்செய்தி விவேகானந்தன் தாய் தந்தையர்களுக்கும் தெரிந்தது. அவர்களும் துக்கமும் மகிழ்ச்சியும் அடைந்தார்கள்.

சிறிது நேரத்திற்குள் இரு குடும்பங்களிலும் அளவு கடந்த சந்தோஷம் குடி கொண்டது உடனே புறப்பட்டு வருமாறு விவேகானந்தனுக்கும், விமலாவுக்கும் தந்திகள் கொடுக்கப்பட்டன.

* * *

இன்று நமசிவாயப்பிள்ளை வீட்டில் ஆனந்தம் குடிகொண்டிருக்கிறது. குழந்தை "ஜெயசரன்" நமசிவாயப்பிள்ளை மடி மீது விளையாடிக் கொண்டிருக்கிறான். அவனுடைய மழலைச் சொல் எல்லோரையும் இன்பம் அடையச் செய்கிறது.

விவேகானந்தனுடைய நண்பர்கள் பலர்; விமலாவின் சிநேகிதர்கள் பலர்; நமசிவாயப்பிள்ளையின் கூட்டாளிகள் பலர்; வருவதும் போவதுமாக இருக்கின்றனர். "விமலா, விவேகானந்தன்" என்ற விலாசத்திற்கு எண்ணற்ற பல பாராட்டுத் தந்திகள் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. விவேகானந்தனுடைய பெற்றோர்கள் அடையும் மகிழ்ச்சியும் சொலத் தரமன்று. ஆ! என்ன குதூகலம்! என்ன மகிழ்ச்சி! விமலாவின் விடுதலைக்கு அவள் அறிவும், துணிவும், விவேகானந்தன் உதவியும் காரணமன்றோ?

---

அதிக மதப்பற்றுள்ளவர்கள், இகழ்ச்சிக்கும், போக்கியமற்ற தன்மைக்கும் அம்மதப்பற்றே கருவியாக உபயோகப்படும்படி நடந்துகொள்ளுகிறார்கள். சந்தேகிக்க முடியாத அவ்வளவு நேர்மையுள்ளவர்களாயிருந்தாலும் மதப்பற்றுள்ளவர்கள் சமூக விரோதிகளாகவும், துர்ப்பாக்கியவான்களாகவும் ஆகிறார்கள்.

கடவுள் இன்றி மனிதன் வாழ முடியுமா? என்பது ஒரு முக்கிய கேள்வியாகாது. ஆனால் முக்கியமான கேள்வி எது வென்றால் "மனிதன் இல்லாமல் கடவுள் இருக்க முடியுமா?" என்பதே.

லேண்டர்.

---

இந்தியாவிலே தெய்வமான பிரமாவின் முகத்தினின்றும், கைகளிலிருந்தும், கால்களிலிருந்தும் பிறந்ததாக எண்ணி, அவ்வெண்ணத்தில் மனித சாதியை நிர்மாணஞ் செய்தார்கள். இவ்வித எண்ணத்தில் நம்பிக்கை இருக்கும் வரையில், இவ்வகைக்கட்டுப்பாட்டில் அழிந்து வரும் இவர்கள் இன்னும் அழிந்து அவஸ்தைப்படுவார்கள். மாஜினி.

# ஏன் குடிக்கிறாய்?

முஸ்லீம்:- ஏனப்பா? இப்படிக் குடித்துவிட்டுக் கூத்தாடு கிறாய்? குடிப்பது பெரிய பாதகம் அல்லவா? குடியை விட்டு விட்டால் நீ எவ்வளவோ முன்னுக்கு வரலாமே!

இந்துக் குடிகாரன்:- போங்க சாயபு! நீங்க எங்க மதத்தை யும், எங்க சாமிகளையும் கெடுக்கப் பார்க்கிறீங்களோ? எங்க மதத்தில் ஒசத்தவங்களா இருக்கிற ஐயமார்கள் எல்லாம் அந்தக்காலத்தில் இருந்தே யாகம் பண்ணி ஆடு மாடெல்லாம் தின்னிருக்காங்க, சோமபானம் இண்ணு சொல்லி நல்லாக் குடிச்சிருக்காங்க! இப்பக்கூட யாகம் பண்ணி இதெல்லாம் பண்றாங்க! அவுங்களெல்லாம் என்னா! ஒண்ணுந்தெரியாத வுங்களா?

அதுவும் இல்லாமல் எங்கசாமிக்குப் பிரியமானதைத்தான் நாங்க செய்யுறோம்! எங்கசாமிகளான காட்டேரி, கறுப்பன், முனியாண்டி, மதுரை வீரன், நொண்டி வீரன் இதுக்கெல் லாம் கள்ளு, சாராயம் இல்லாமல் படையல் போட முடியுமா? அந்தச் சாமிகளுக்குப் படைச்ச பிரசாதங்களைத் தானே நாங்க சாப்பிடுறோம்? இதில் என்ன குத்தம்?

முஸ்லீம்:- அதற்காகத்தான் நாங்கள் விக்கிரக வணக்கம் கூடாது என்று சொல்லுகிறோம். இந்தச் சாமிகள் பேரால் பொம்மைகளை வைத்துக் கும்பிடுகிறதினால் தான் நீங்கள் குடித்துக் கெட்டுப்போகிறீர்கள்! சம்பாதிக்கிறதை யெல்லாம் சாமி பேரைச்சொல்லி குடித்து விட்டுச் சோற்றுக்குத் திண் டாடுகிறீர்கள்! நான் சொல்லுவது சரியா? இல்லையா? என்று யோசித்துப் பார்!

இந்துக் குடிகாரன்:- ஐயா நீங்க சொல்றது சரியோ, தப் போ அதைப்பற்றி எனக்குத் தெரியாது; ஆனா-சாயபு ஐயா! இப்பதான் நீங்க குடிக்க வாண்டாம் இண்ணு சொன்ன சங் கதி தெரிஞ்சுது! எங்க மதத்தை அழிக்கிறத்துக்குப் பாக்கி றீங்க! ஒங்க பேச்சை நான் கேக்கமாட்டே ஐயா! எங்க சாமி கோவிச்சுக்கும். நான் போறேன்.

# விஞ்ஞான உலகம்.

## சர். ஜே. ஸி. போசின் ஆராய்ச்சி.

இவர் வேர்களின் வளர்ச்சி விகிதத்தையும், அதில் செயற்கை முறையில் உண்டாகும் மாறுதல்களையும் தானாகவே பதிவு செய்யக்கூடிய ஒரு புதிய முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்

அலுமினியத்தாலான தராசுத் தட்டை வேரின் நுனியின் கீழ் வைக்கப்படுகிறது. வேரின் வளர்ச்சி அளவைத் தட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கும் யந்திரம் காட்டுகின்றது. சில ரசாயனப் பொருள்களின் ஆவியால் வேர் சுருங்கிக் கொள்வதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

சில தாவரங்களின் உட்பக்கத்தில் உற்பத்திக் கருவிகள் உண்டாவதைத் தகுந்த சாதனங்களின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தண்டுகளில் நேராகவும், குறுக்காகவும் வளர்ச்சி ஏற்படுவதை விசேஷ கருவியின் மூலம் ஏக காலத்தில் கண்டுபிடிக்கப்படுகிறது.

விதைக்குள் எப்பொழுது வளர்ச்சி உண்டாகத் தொடங்குகிறது என்பதை வெளியிலிருந்து பார்க்கமுடியாது ஆனால் இதில் ஏற்படும் வளர்ச்சியைப் பதிவு செய்யக்கூடிய கருவி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. வெளியில் உள்ள மாறுதல்களைக்கொண்டு விதையினுள் உண்டாகும் வளர்ச்சியின் அளவைச் சரியாகத் தீர்மானிக்க முடிகிறது.

ஒவ்வொரு செடியும், மிருகமும் உயிர் வாழ்ந்திருப்பதற்கு எவ்வளவு பிராணவாயு அவசியமாக வேண்டும் என்பதை ஒரு புதிய யந்திரம் சரியாக அளந்து காட்டுகிறது.

## நூறு வருஷங்களுக்குப் பிறகு உலகம்.

அமெரிக்க ரசாயன சங்கத்தின் மூன்றாவது ஆண்டு விழாவில் டாக்டர், தாமஸ் மிட்கிலி என்னும் ரசாயன சாஸ்திரியார் "100 வருஷங்களுக்குப் பிறகு உலக நிலை எப்படி இருக்கக்கூடும்?" என்பதுபற்றிக் குறிப்பிட்டதாவது:—

விஞ்ஞான வளர்ச்சியின் பயனாய் ஜல தோஷம், இன்புளுவென்சா போன்ற சுர நோய்கள், எலும்புருக்கி நோய், பிளவை முதலிய நோய்கள் ஒழிந்துபோகும்.

கையை நெறித்தால், உங்கள் படுக்கையின் மேல் விரிக்கக்கூடிய விரிப்பு தானாகவே விரித்துக்கொள்ளும் ஒரு பொத்தானை அழுத்தியவுடன் குளிர் நிறைந்திருக்கும் அறை உஷ்ணமுடையதாகும். செல்லுலாய்டினால் செய்யப்பட்ட உடைகளைத் தரிப்பீர்கள்; அதைத்துவைக்க வேண்டிய அவசியமே இல்லை; அதன் விலையும் மலிவானதாக இருக்கும். கஷ்டமில்லாமல் தூங்கக்கூடிய சவுகரியம் உண்டாகும். கனா மாத்திரைகளைச் சாப்பிடுவதன் மூலம் கெட்ட கனவுகள் காணாமல், நல்ல கனவுகள் காணலாம். நெருப்பு, பெட்ரோல்களின் உதவியில்லாமல் ரேடியோ சக்தியின் மூலமே எல்லாச்செயல்களையும் நடத்தலாம்.

பூமியின் ஆகர்ஷண சக்தியைவிட மிகுந்த சக்தியை உண்டாக்க ரசாயன சாஸ்திரிகள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இது கை கூடினால் நவக்கிரகங்களுக்குக்கூட போக்கு வரவு வைத்துக்கொள்ளக்கூடும்.

மக்களை முதுமைப்பருவம் அணுகாது; என்றும் இளமைப்பருவத்தோடு வாழலாம். எந்த ஆபத்துக்களும் உண்டாகாமல் தடுத்துக்கொள்ளலாம்.

## மூளையை அளக்கலாம்.

விஞ்ஞான சாஸ்திரிகள் நமது மூளை வேலை செய்யும் பொழுது அதன் நரம்புகளிலிருந்து மின்சார சக்தி உண்டாவதாகக்கூறுகின்றனர். இப்பொழுது மூளையின் வேலையை அளந்து காண்பதற்கு ஒரு யந்திரம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அது மூளையின் மின்சார சக்தியை அதிகமாக்கி, அதன் விரைவைக்காகிதத்தில் படமாக எழுதிக்காட்டும். மிகுதியாக யோசனை பண்ணும்போது, மின்சார சக்தி வேகமாகவும் நீளமாகவும் வீசுவதைப்படத்தில் நீளமாகவும், நெருக்கமாகவும் விழும் கோடுகளால் அறியலாம்.

## இருதயத் துடிப்பைப் படமெடுப்பது.

லண்டன் வைத்தியப் பொருட் காட்சியில், இருதயத் துடிப்பைப் படமெடுக்கும் கருவி ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கருவியினால் இருதயத்தின் துடிப்பைக் கணக்கெடுத்துக் காட்டப்பட்டது. அக்கருவிக்கு "போர்ட்டபிள் எலக்ட்ரோ கார்ட்டியோ கிராப்" என்று பெயர் அதில் அமைக்கப்பட்டிருக்கின்ற மின்சாரக் கருவியின் உதவியினால் நோயாளி பயப்படாதபடி படம் பிடிக்கமுடிகிறது.

# குடி அரசு வெளியீடுகள்.

## 8-அணா வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள் (Dr. R. P. பராஞ்சிபை.)
இராமாயண ஆராய்ச்சி 2-ம் பாகம் (சந்திரசேகரப் பாவலர்)
கைவல்ய சாமியாரின் கட்டுரைகள், (கைவல்யம்)

## 4-அணா வெளியீடுகள்.

இராமாயண ஆராய்ச்சி 1-ம் பாகம் (சந்திரசேகரப் பாவலர்)
லெனினும் மதமும்.
விவாஹ விடுதலை (K. M. பாலசுப்ரமண்யம்)
கடவுளும் பிரபஞ்சமும் (M. சிங்காரவேலு)
பங்கஜம் or பார்ப்பனக்கொடுமை
சுதந்தரப் போர்

## 3-அணா வெளியீடுகள்.

பொது உடமைத் தத்துவங்கள்
தர்ம பரீக்ஷை
மேயோ கூற்று மெய்யா பொய்யா (C. A. அய்யாமுத்து)

## 2-அணா வெளியீடுகள்.

சீர்திருத்தம் (ஈ. வெ. ராவின் சொற்பொழிவு)
மனுநீதி விளக்கம் (சிவானந்த சரஸ்வதி)
அகத்தியர் ஆராய்ச்சி (வித்வான் நமச்சிவாய முதலியார்)
இராமலிங்க சுவாமிகள் பாடல்கள்

## 1-அணா வெளியீடுகள்

போல்ஷ்விக் முறை
பர்னாட்ஷா உபந்நியாசம்

## ½-அணா வெளியீடுகள்

சமதர்ம உபந்நியாசம் (M. சிங்காரவேலு)
இலங்கைச் சொற்பொழிவு (ஈ. வெ. ரா.)

## இதர பதிப்பக வெளியீடுகள்.

## 1-ரூபாய் வெளியீடுகள்.

The Crux of the Indian Problem, (Dr. R. P. Pranjibi)
The Right of the temple entry (P. Chidambaram)

## 8-அணா வெளியீடுகள்.

சிதம்பர ரகசியம் (தென்பாதி கனகசபை)
மாதர் சுதந்தரம் (சாமி சிதம்பரனார்)
நச்சுப்பொய்கை (C. A. அய்யாமுத்து)

## 6-அணா வெளியீடு.

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்

# பகுத்தறிவு வெளியீடுகள்.

### தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

| | | |
|---|---|---|
| பெண் ஏன் அடிமையானாள்? ... ... | ரூ. | 0 5 0 |
| பிரகிருதிவாதம் ... ... ... | ,, | 0 3 0 |
| குடி அரசுக் கலம்பகம் ... ... | ,, | 0 6 0 |

### அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

| | | |
|---|---|---|
| முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ... | ,, | 0 5 0 |

### Hon. பெர்ட்ரண்ட் ரசல் எழுதியவை.

| | | |
|---|---|---|
| நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ... ... | ,, | 0 3 0 |
| மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ... | ,, | 0 3 0 |

### அறிஞர் இங்கர்சால் எழுதியவை

| | | |
|---|---|---|
| மதம் என்றால் என்ன? ... ... | ,, | 0 3 0 |
| கடவுள் ... ... ... | ,, | 0 5 0 |
| நான் சமுசயவாதியானதேன்? ... ... | ,, | 0 3 0 |
| வால்டேர் ... ... ... | ,, | 0 4 0 |

### அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

| | | |
|---|---|---|
| மதமும் விஞ்ஞானமும் ... ... | ,, | 0 3 0 |
| பிரபஞ்ச உற்பத்தி ... ... ... | ,, | 0 3 0 |

### அறிஞர் ஜோஸப் மேக்கேபி எழுதியது.

| | | |
|---|---|---|
| மதபுரட்சி ... ... ... | ,, | 0 4 0 |

### அறிஞர் சேனிக்கு எழுதியது

| | | |
|---|---|---|
| பாதிரிகளும் பெண்களும் பாவ மன்னிப்பும் ... | ,, | 0 3 0 |

### தோழர் M சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

| | | |
|---|---|---|
| மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும் I-ம் பாகம் | | 0 6 0 |
| ஷை II-ம் பாகம் | | 0 5 0 |

### அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியது.

| | | |
|---|---|---|
| பகுத்தறிவு or கத்தோலிக் குருவின் மரண சாசனம் | | 0 4 0 |

### தோழர் அ. ராகவன் எழுதியது.

| | | |
|---|---|---|
| பெண்ணுரிமையும் மதமும் ... ... | ,, | 0 3 0 |

### அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது

| | | |
|---|---|---|
| ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ... | ,, | 0 5 0 |
| ஷை காசிக்கோர் பயின்று ... | ,, | 0 8 0 |
| மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ஸ. ப. நா. பி.) | | 0 4 0 |

**பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் Ltd, ஈரோடு.**

*Edited Printed and Published by E. V. Krishnasamy for the Rational Books Publishing Society Ltd at the Unmaivilakam Press, Erode.*